Registered No. M. 878

# பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal.

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization


| | | |
|---|---|---|
| தொகுதி 6 | 1916௵ ஜனவரி-பிப்ரவரி௴<br>ராக்ஷஸ௵ தை௴ | பகுதி 9-10 |

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.


Copy Right Reserved.

324

# பொருளடக்கம்.

# CONTENT.

பக்கம்.


1. தற்கால நிலைமை.—அ. ரங்கஸ்வாமி ஐயர் 321
(From the Editor)—A. Rangaswamy Iyer.

2. சற்குரு சரணங்களில்—சார்லிதாஸன். 329
At the Feet of the Master—Charliedasa

3. மீராபாய்—R. ஸ்ரீநிவாஸ ஐயர். 336
Meerabhai—R. Sreenivasa Iyer.

4. பெற்றோர் கட்கும் உபாத்தியார் கட்கும் ஓர் விக்ஞாபனம் --B. S. ராமசுப்பையர். 346
An appeal to parents & Teachers —B. S. Ramasubbier

5. சிறுவர்க்குரிய விஷயம்—வஸந்தானந்தன். 353
Children's corner—Vasanthananda.

6. சமாசாரம்—News. 356

7. தியானக்கிரம விஷயம்—கே. யஸ். ராமசந்திர ஐயர். 357
Meditations from At the Feet of the Master. -K. S. Ramachandrier.


---

## பிரஹ்மக்ஞான ஸபை.

இது 1875 ஆு நவம்பர் மீ 17உ நியூயார்க்கு நகரில் உண்டாகி 1905 ஆு ஏப்ரல்மீ 3உ மதராஸில ஸ்தாபிக்கப்பட்டது. இதின் நோக்கங்கள்:—

1. ஜாதி, மதம், பால், வர்ணம் இவ்வேற்றுமைகளின்றி, மநுஷ்ய வர்க்கத்தினரின் ஸர்வத்ர ஸஹோதர பாவத்தை அதிகரிக்க, அஸ்திவாரமாக அமைவது.

2. ஸமதரிசன புத்தியுடன் இதர மதங்களையும் தத்துவ சாஸ்த்ரங்களையும் பிரகிருதி சாஸ்த்ரங்களையும் ஆராய்வது.

3. இதுவரை மநுஷ்யனுடைய நேரான அறிவுக்கு எட்டாத பல பிரபஞ்சநியதிகளை வியக்தமாயுணர்வதற்குச் சாதநமாக, மநுஷ்யனிடத்தில் குப்தமாயுள்ள சக்திகளை விகஸிக்கச் செய்வது.

325

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 } 1916ஞ ஜனவரி-பிப்ரவரிமீ ராக்ஷஸஞ தைமீ { பகுதி 9-10.

## தற்கால நிலைமை.

இப்பொழுது நிகழும் காலம் விரைவாகச் செல்லுகின்றது. விரைவாகச் செல்லுகின்றது என்று சொல்வதின் தாத்பரியம் காலத்தின் அளவைப் பற்றியதல்ல. ஒரு நாள் எக்காலத்திலும் 60 நாழிகை யடங்கிய காலமாயுளது. 1 மணி அவ்விதமாகவே 60 நிமிஷ மடங்கியதாகவே எக்காலத்திலும் நிற்கின்றது. மனிதர்களின் விகாஸமுறையில் நிகழும் வர்த்தமானங்கள் சில காலங்களில் அதிவிரைவாக நிகழ்கின்றன. சில காலங்களில் மெதுவாகச் செல்லுகின்றன. ஒரு தேசத்தில் உள்ளவர்கள் சில காலத்தில் தூங்கித் தூங்கிச் செல்லுகின்றனர். சில காலத்தில் அதிவிரைவாய்த் தாண்டித் தாண்டி ஓடுவதுபோலக் காண்கின்றனர். நம்முடைய பூர்வகிரந்தங்களில் கலியுகத்தைக் காட்

---

* சென்ற மீ "தற்கால நிலைமை"யில் வெளி வந்துள்ளது.

டிலும் ஸத்யயுகம் 4 மடங்கு நீடித்த கால அளவு பொருந்தியதென்றும், திரேதாயுகம் மூன்று மடங்கு கொண்டதென்றும் துவாபரயுகம் இரு மடங்கு கொண்டதென்றும் கூறப்பட்டிருக்கிறது. காரியங்கள் அந்தந்த யுகங்களில் விரைவாக முடிவுபெறும் தன்மையை வெவ்வேறு யுகங்களின் கால அளவுகள் கூறுகின்றன. முன் காலங்களில் ஆயிரக்கணக்கான வருஷங்களால் செய்யப்பட்ட தபஸினால் அடையப்படும் ஸித்திகளைக்கலியுகத்தில் பக்தியாலும் தானத்தாலும் விரைவாய் அடையக் கூடுமென்று பாகவதர்களால் கூறப்படுவதும் இவ்வுண்மையை விளக்குகின்றது

***

அதுபோய் பிரஹ்மக்ஞான சங்கத்தின் தற்கால கதியானது அதிவேகத்துடன் கூடியதாக விருக்கின்றது பல பிரவிர்த்திகளுடன்கூடி நிற்கின்றது. வெளிப்படையாய்ப் பார்ப்போர்க்கு நூதன நூதன தோற்றத்தையுடையதாய்த் தோன்றுகின்றது. அது 1875-ம் ஹு த்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலந் தொடங்கிமுதல் இருபது வருஷங்களில் சரீரத்திற்கு யஜமானனுகிய சரீரி என்ற ஆத்மா உளதென்றும், அந்த ஆத்மாவைப் பற்றிய அறிவாகிய ஆத்மக்ஞானத்தை அடைவது சிரேஷ்டமென்றும் கிரந்தங்கள் மூலமாயும் பத்திரிகைகள் மூலமாயும் அப்பியாஸ முறைகளைப் பிரசுரம்செய்வது மூலமாயும் பரவச்செய்து, இவ்வுலகத்தைக் காட்டிலும் சூக்ஷ்மமான உலகங்கள், அவ்வுலகங்களைச் சார்ந்த சக்திகள், இவைபற்றிய உண்மையை வெளிப்படுத்தி போதனை செய்யும் கைங்கரியத்தைக் கைப்பற்றி வந்தது. அதற்குப் பிறகு மதப்பயிற்சியுடன் சேர்ந்த கல்வியை வாலிபர்களுக்குப் புகட்டும் கல்விச் சாலைகளை ஸ்தாபிப்பதும் தேசாபிமானப் பொது ஜனகைங்கரியம் முதலிய குண விசேஷங்களை அவர்களிடத்தில் எற்படுத்துவதும்

ஆசார சீர்திருத்தங்களை விகாஸமுறைக்கு ஒத்தவாறு பலப்படுத்துவதும் இச்சங்கத்தின் பிரவிர்த்திகளாக ஏற்பட்டன. அதற்குப் பிறகு இச்சபையின் தலைவர்கள் ராஜாங்க சீர்திருத்தங்களை முதன்மையாக நாடி அவைகளை அப்பியாஸத்திற்குக் கொண்டுவரத் தக்க பெரு முயற்சிகளைச் செய்து வருகிறார்கள்.

***

படிப்படியாகச் சென்று இச்சங்கத்தின் தற்கால முயற்சியானது கர்ம மார்க்கத்தைத் தழுவி நிற்கின்றது. அதின் அக்கிராஸனாதிபதியவர்களின் கைங்கர்யங்களால், நமது தேசத்திற்கு அபிவிருத்தியைக் கொடுத்து பிரிட்டிஷ் ராஜ்யமண்டலத்தில் அதின் கௌரவத்தை அதிகரிக்கச் செய்யத் தக்கதாயிருக்கின்றது. இவ்வருஷத்தில் பம்பாய் நகரத்தில் நடந்த ராஜ்ய சீர்திருத்த விஷயங்களைப் பற்றி விவகரித்த 'இந்தியன் நாஷனல் காங்கிரஸ்' சபையும் 'முஸ்லிம் லீக் என்ற முகமதிய சபையும் 'இந்தியன் ஸோஷல் கன்பிரென்ஸ்' என்ற ஆசார சீர்திருத்த சபையும் இந்து சபையும் இன்னும் மற்ற சங்கங்களும் பயனுடன் கூடின. காங்கிரஸ் ஸபையில் இவ்வருஷம் விசேஷமாய் இரண்டு விஷயங்கள் கைப்பற்றப் பட்டன. 1907-ளு முதல் காங்கிரஸ் ஸபையைச் சேர்ந்தவர்கள் மிதவாதிகள் என்றும் 'அமிதவாதிகள்' என்றும் இருவகையாகப் பிரிந்துகொண்டு ஒன்று சேராமல் கக்ஷிபட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் மதிக்காமல் பலம் குன்றினவர்களானார்கள். இந்திய தேசமானது பிரிட்டிஷ் ராஜ்யமண்டலத்தில் ஒரு அங்கமாயிருந்து மேல் நோக்கிச் செல்லதக்கதென்பதும் அதின் மூலமாய் அதினுடைய நிலைமையும் நாகரிகமும் அபிவிருத்தியை அடையத் தக்கதென்பதும் அபிவிருத்தி

யானது சட்டத்திற்கு ஒத்த வழிகளால் அடையத் தக்க தென்பதும் இருதரப் பாருடைய கொள்கையாகும். அவ் விருதாப்பார்களும் ஒன்று சேர்வதற்கு காரணமாக, 'அமிதவாதிகள்' என்ற பக்கத்தைச் சார்ந்தோர்கள் காங் கிரஸில் பிரதிநிதிகளாய் நுழையத் தக்க ஒரு தீர்மானம் நடைபெற்றது.

***

மற்றொரு விஷயமானது காங்கிரஸ் மகாசபையின் முதலாவது நோக்கத்திற்கு சம்பந்தப்பட்டது. அதாவது பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்தில் இந்திய தேசத்தை மற்ற குடியேறின நாடுகளைப்போல ஒரு அங்கமாக நாளாவர்த் தியில் செய்வதற்குத்தக்க ராஜாங்க சீர்திருத்தங்களைத் தீர் மானித்து அவைகளை வெளிப்படுத்தவும் பரவச் செய்யவும் ஜனங்களுக்கு அவைகளை உத்தரவாதமாய்க் கொண்டு செ லுத்தத் தக்க அறிவையும் விவேகத்தையும் புகட்டுவதற்கு ஏற்ற வழிகளை யோசிக்கவும் ஆல் இந்தியா காங்கிரஸ் கமி ட்டியாரை இந்தியாவிலுள்ள மற்ற ராஜரீக சபையோரு டன் கலந்து ரிப்போர்ட்டு செய்யும்படி காங்கிரஸ் சபை யோர் தீர்மானித்தார்கள். அத்தீர்மானத்தை அநுஸரித்து மேற்சொல்லிய ஆல் இந்தியா காங்கிரஸ் கமிட்டியார் அடுத்த எப்பிரல் மாதத்தில் ஈஸ்டர் விடுமுறை நாட்களில் பிரயாகை என்ற அல்லாஹபாத் என்னும் நகரில் கூடப் போகின்றனர்.

***

பம்பாயில் பிரஹ்மஞ்ஞான சபையின் 40-வது வருஷா ந்த மகோத்ஸவம் சென்ற டிசம்பர் மாசம் 4உ யில் நடை பெற்றது. இதுவரை அம்மகோத்ஸவமானது காசியிலும் அடையாற்றிலும் மாறி மாறி ஒவ்வொரு வருஷமும் கொண்

டாட்பட்டது. 1882-ம் வருஷத்தில் பிரஹ்மஞான சபையின் தலைமையிடமானது பம்பாயிலிருந்து அடையாற்றுக்கு மாற்றப்பட்டது. அக்காலமுதல் சென்ற டிசம்பர் மாசம் வரை பம்பாயில் இவ்வருஷாந்தக் கூட்டமானது கூடினதில்லை. இச்சபை ஸ்தாபகர்கள் அமெரிக்காவிலிருந்து முதல் முதல் இறங்கின காலமாகிய 1879-ம் வருஷத்தில் இரண்டு கிளைச் சங்கங்கள் இருந்தன.

***

இப்பொழுதோ 1578 கிளைச் சங்கங்கள் உள. 23 தேசங்களில் அக்கிளைச் சங்கங்கள் பரவியிருக்கின்றன. அத்தேசங்கள் அமெரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் உள. உலகத்தில் அதிகோரமான யுத்தம் நிகழினும் 3099 அங்கத்தினர்கள் நூதனமாகப் பிரஹ்மஞான சபையில் சென்ற வருஷத்தில் சேர்ந்திருக்கின்றனர். அவர்களில் 919 பேர்கள் அமெரிக்காக் கண்டத்தைச்சார்ந்த ஐக்கிய மாகாணங்களில் இருக்கின்றனர். 617 பேர்கள் இந்து தேசத்தர்கள், ஆங்கிலேய தேசத்தில் 311 பேர்கள் நூதனமாய்ச் சேர்ந்தார்கள். 206 பேர்கள் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள். மற்றவர்களில் 165 பேர்கள் உலாந்தர்களாகவும் 162 பேர்கள் உலாந்த இந்தியதேசத்தைச் சார்ந்தவர்களாகவும் 150 பேர்கள் குயூபா தீவைச் சேர்ந்தவர்களாகவுமிருக்கிறார்கள்.

***

அக்கிராஸனாதிபதியவர்களால் அக்காலத்தில் வாசிக்கப்பட்ட வருஷாந்தர ரிப்போர்ட்டில் இப்போது நிகழும் யுத்தத்தின் தத்துவமானது தெளிவாகக் கூறப்பட்டது. இந்த யுத்தமானது முன் காலத்தில் புராணங்களில் கூறப்

பட்ட அமரர்களுக்கும் அசுரர்களுக்கும் நேர்ந்த யுத்தம் போன்றது. ராமராவண யுத்தத்திற்குச் சாமானமானது. உலகத்தினர் இருதரப்பாருக்குள் சாதாரணமாக நிகழும் போர் போன்றதன்று. இந்த யுத்தத்திலே நிகழும் எதிர்ச்சியோ நீதிக்கும் அநீதிக்கும் ஏற்படும்போர் போன்றது. மேல் உலகங்களில் விகாஸமுறையைப் பலப்படுத்தும் சக்திகளுக்கும் அவற்றிற்குத் தடையாக நிற்கும் சக்திகளுக்கும் கல்பாந்த காலங்களில் ஏற்படும் யுத்தங்களைப்போல தற்காலத்திலும் ஓர் உபகல்ப முடிவில் நிகழும் மேலுலகப் போராட்டத்தின் பிரதிபிம்பமாகவே இவ்வுலகில் போர் ஏற்பட்டிருக்கிறது. உலகத்தில் விகாஸமுறையை பலப்படுத்துவோர்கள் தேவர்களாகவும் ரிஷிகளாகவுமிருக்கின்றனர் அதற்கு விகாதத்தை உண்டு பண்ணுவோர்கள் அசுரர்களாகவும் அசுரஸஹவாச வித்தையுடைய மனிதர்களாகவுமிருக்கின்றார்கள். இக்காலத்தில் குப்தவித்தையைக் கைக்கொண்டவர்கள் இருதிறத்தார்களுக்கும் மத்தியஸ்தமாய் இருக்கவொண்ணாது. இப்போது போர் புரியும் கக்ஷிகளில் ஜெர்மனி ஆஸ்திரியா தேசத்தோர்கள் அசுரர்களுடைய கருவிகளாக உபயோகப்படுத்தப்படுகின்றார்கள். பிரஹ்மஞான சபையின் தலைவர்கள் ரிஷிகளைச் சேர்ந்தவர்களாயிருப்பதால் அவர்களைச் சேர்ந்த பக்கத்திலிருக்கக் கடமைப் பட்டிருக்கின்றார்கள். பல தேசங்களில் பிரஹ்மஞான சங்கத்தோர்களால் சென்ற வருஷத்தில் நடத்தப்பட்ட பல கைங்கரியங்கள் அக்கிராஸனாதிபதியவர்களின் ரிப்போர்ட்டில் கூறப்பட்டன. ஆங்கிலேய தேசத்தில் யுத்த சம்பந்தமான கைங்கரியங்களில் பிரஹ்மஞான சங்க மெம்பர்கள் பிரவேசித்தனர். சிலர் யுத்தத்தில் காயப்பட்டவர்களுக்கேற்ற ஆஸ்பத்திரிகள் நடத்துவதிலும் சிலர் போர்

வீரர்களுக்கேற்ற சௌகரியங்களைத் தயார் செய்து அனுப்புவதிலும் Brighton Lodge என்ற சங்கத்தினர் இந்திய சிப்பாய்களுக்கு உதவி புரிவதிலும் சிரத்தையுள்ளவர்களாகவிருந்திருக்கின்றனர். லண்டன் மாநகரில் சங்கத்தின் பிரதான கட்டடம் மென்மேலும் கட்டப்பட்டு வருகின்றது.

***

இந்தியாவிலோ கிளைச் சங்கங்கள் சற்று குறைந்தாலும் மெம்பர்கள் அதிகரித்தனர். ஆஸ்திரேலியாவில் ஸ்ரீமான் லெட்பீடர்வர்களுடைய பிரஸங்கங்களும் அவருடைய ஸந்நிதானமும் கொண்டாடப்பட்டு வருகின்றது ஆஸ்திரேலியர்களுடைய பிரதானகட்டிடமோ எட்டுமாடியோடுகூடினதாக நிர்மிக்கப்பட்டு வருகின்றது. அது 1916-ம் வருஷம் முற்பாதியில் முற்றுப் பெறக்கூடியதாயிருக்கிறது.

***

பிரஹ்மக்ஞான சபையானது நூதன உபகல்பத்தை ஆரம்பிக்கச் செய்து அதின் வருகையைப் பகிரங்கப்படுத்தும் ஒரு தூதன்போல நிற்கின்றது. அக்கல்பம் துவக்குமுன் அதற்கு ஒற்றுமையில்லாத பழைய கல்பத்திற்குரிய தோஷங்கள் நாசத்தை அடைகின்றன. அதினால்தான் உலகெங்கும் சண்டை சச்சரவுகள் விரபி யிருகின்றன. அச்சண்டைகள் ஓய்ந்தபின்னர் புதிய கல்பத்தை நிலைநிறுத்தி அதற்கு அவரது அநுக்கிரகத்தை அளிப்பதற்காகத் தோன்றப்போகும் ஜகத்குருவின் நல்வரவைப் பிரஹ்மக்ஞான சபையானது ஜயபேரிகைபோல் முழங்குகின்றது என்று அக்கிராஸனாதிபதியவர்களின் ரிப்போர்ட்டின் கடைசியில் கூறப்பட்டது.

***

மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் டிஸம்பர்மீ 25,27,28, 29உ களில் நாலு பிரஸங்கங்கள் செய்தனர். முதலாவது பிரஸங்கம் "பிரஹ்மக்ஞானமும் ஈசுவரனின் தன்மையும்" என்ற விஷயத்தைப் பற்றியது. இரண்டாவது பிர

ஸங்கம் பிரஹமக்ஞானமும் மனிதனும் என்ற விஷயத்தைக் கூறியது. 3-வது பிரஸங்கத்தின் விஷயம் பிரஹமக்ஞானம், நன்மை, தீமை என்பது. நாலாவது தினத்தில் பிரஹ்மக்ஞானம், சகோதரபாவம் என்ற விஷயத்தைப் பற்றிப் பிரஸங்கித்தனர். ஸ்ரீமான் ஜீனராஜதாஸர் உலகின் நூதன அமைப்பு! என்ற விஷயத்தைப் பற்றி உபந்நியாஸம் செய்தனர். அவ்வமைப்பானது சகோதர பாவத்தை அஸ்திவாரமாக வுடையதென்று வற்புறுத்திக் கூறினர். சிறுவர்களுக்கென்றே ஒரு உபந்நியாஸமும் செய்தனர். மேற்கூறிய உபந்நியாஸம், செய்யப்பட்ட காலங்களில் வெகு ஜனங்கள் கூடியிருந்தனர். டிஸம்பர்மீ 27௳ மாலையில் பிரஹ்மக்ஞான சபையின் வருஷ மகோத்ஸவம் பகிரங்கமாகக் கொண்டாடப்பட்ட காலத்தில் ஜஸ்டிஸ் டி. சதாசிவ ஐயரவர்கள் பத்நியாரும் ஜஸ்டிஸ் சந்திரசேகர ஐயரவர்கள் பத்தினியாரும் தமிழில் "பிரமக்ஞானமும் இந்தியஸ்திரீகளும்" என்ற விஷயத்தைப்பற்றி உபந்நியாஸம் செய்தனர்.

***

இந்து சர்வ கலாசாலையின் ஸ்தாபனப் பிரதிஷ்டையானது 1916-ஆம் பிப்ரவரிமீ 4௳யில் வெகு விமரிசையாய்க் கொண்டாடப் படப்போகின்றது. கனந்தங்கிய கவர்னர் ஜெனரலவர்கள் அக்காலத்தில் அக்கிராஸனம் வகித்து ஸ்தாபனம் செய்வார்கள். மகாராஜாக்களும் ராஜாக்களும் ஜமீன்தார்களும் பிரபுக்களும் வித்வான்களும் இத்தேசத்தில் பல இடங்களிலிருந்து கூடப்போகின்றனர். அச்சர்வ கலாசாலையின் ஸ்தாபனமானது இந்துக்களின் அபிவிருத்தியை அதிகரிக்கத்தக்க விஷயமென்றும் அதினால் இந்துக்களின் நாகரிகமானது மேன்மையடையத் தக்கதென்றும் நாம் சொல்லத்தகும்.

அ. ரங்கஸாமி ஐயர்.

# "சற்குரு சரணங்களில்"

## I

ஸ்ரீமான் C. W. (Leadbeater) லெட்பீடரவர்கள் நியூ ஸீலெண்ட் என்னும் நாட்டிற் செய்த ஓர் உபந்நியாசத்தில் 'சற்குரு சரணங்களில்'' என்னும் அரியநூல் எவ்வாறு உலகில் வெளிவந்ததெனக் கூறியுள்ளார். இதைப்பற்றியே ஸ்ரீமான் ஜி எஸ். அருண்டேல் அவர்களும், தாம் இப்பொழுது எழுதிவரும் புத்தகத்தில் சில அந்தரங்க உண்மைகளை வெளியிட்டிருக்கின்றனர். இவையாவும் உலகின் தற்கால பக்குவநிலைமையை ஒருவாறு காண்பிப்பதாகும். "செவியுள்ளோர் கேட்கட்டும்; கண்ணுள்ளோர் நோக்கட்டும்" என்ற ஆன்றோர் மொழியை ஈண்டு எடுத்துக்கூறுதல் மிகப் பொருத்தமானது. முதலில் ஸ்ரீமாந் லெட்பீடரவர்களின் பிரசங்கத்திற் கூறியுள்ளவற்றை நாம் (கவனிப்போம்) உற்றுநோக்குவோம்:—

"...பரமாசாரியர் உலகில் எழுந்தருளுங்கால் அவர் எத்தகைய உபதேசம் அருளிச்செய்வாரென ஊகிக்க, வேறொரு வழியுமுளது. உதயதிசை நக்ஷத்திர சங்கத்தின் தலைவரான ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தியவர்கள் "சற்குரு சரணங்களில்'' என்னும் சிறுநூலை நீவிர் எல்லோரும் பார்த்திருக்கலாம். இதுகாறும் நீவிர் அதைப் படித்திராவிடினும், இனியாவது படிக்கவேண்டுவ தவசியம். முதலில் ஞானதீக்ஷையை (First Initiation) ஆல்கியோன் பெறுமாறு அவரது குருநாதனால் அளிக்கப்பட்ட போதங்கள்

* "Correspondence Study Series'' by Mr. G.S.A.

யாவும் அதன்கண் அடங்கியுள்ளன. அவரது குருநாதர் யாரெனின், முன்னர் கிரீஸ்தேசத்தில் பிதகோராஸ் (Pythagoras) என்றும் இப்பொழுது நமது பிரஹ்மஞான சபையில் தேவாபி என்றும் நாமம் படைத்த கூத்ஹூமி மகரிஷி அவர்களே. இவர் ஆல்கியோனுக்குபதேசஞ் செய்யுங்கால் நானும் கூடவிருந்தேன். ஏனெனில், எனது பாலிய நண்பரான ஆல்கியோனை ஞானமார்க்கத்தில்பழக்கி உதவிவரும்படியான கடமை ஏனைய அலுவல்களோடு எனக்கு ஏற்பட்டிருந்தது. இஞ்ஞானமொழிகள் ஆல்கியோன் சரீரம் நித்திரையிலிருந்தபொழுது, சூக்கும தேகத்தில் அவருக்கு அளிக்கப்பட்டுவந்தன. பிரதி இரவிலும் ஆல்கியோனைக் குருநாதனுடைய திருவடிகட்கு (அவர் உபதேசஞ் செய்யுமாறு) நான் அழைத்துச் சென்றேன். அக்காலத்தில் ஸ்ரீமான் J. கிருஷ்ணமூர்த்தி (அதாவது ஆல்கியோனுக்கு) அவர்களுக்குப் பதின்மூன்றே பிராயந்தான். ஆகலால், அவ்விளம் சரீரமூலமாய் அவர் கற்கும்படி சங்கதிகளை மிகத் தெளிவாக வுரைக்கவேண்டி வந்தது. அன்றியும் அந்நியபாஷையில் உபதேசம் செய்தமையால், அவை உள்ளங்கை நெல்லிக்கனிபோல மிக வியக்தமாய்க் காண்பிக்கப் படலாயிற்று. ஆயினும், சீடன் முதல் ஞான தீக்ஷை (பரிவிராஜகதீக்ஷை)யைப் பெறுவதற்கு வேண்டிய போதங்கள்யாவும் அதில் (கண்டுள்ளன.) சுமார் கால்மணி நேரம் ஒவ்வோர் இரவும் குருநாதர் இவ்விதம் போதித்து, அப்பாடத்தின் இறுதியில் கூறியவை யனைத்தையும் கூட்டி சூத்திரம்போல் ஓர் வாக்கியத்தில் முடிப்பார். மறுநாட் காலையில் ஆல்கியோன் விழித்தெழுந்தவுடன் அவற்றைக் குறித்துக்கொள்வார். அச்சூத்திரங்களே இப்புத்தக ரூபமாய் வெளிவந்திருக்கின்றன. குருநாதர் உபதேசத்தைச்

* பிதகோராஸ் சரித்திரச் சுருக்கத்தைப் பூர்ணசந்திரோதயம் 4—ம் தொகுதி 191—ம் பக்கத்தில் பார்க்க. (ப-ர்)

செய்தார்; ஆல்கியோன் அதைச் சூத்திரரூபமாய் (சுருக்கி) எழுதிவைத்தார். ஜகத்குரு (போதிஸத்வா) முறையிற் செய்யப்பட்ட உபதேசங்களிற் சில இவையாகும். அதன் பின்னர், ஆல்கியோன் காசி க்ஷேத்ரத்திற்குச் சென்று அங்கு சில ஆப்தர்களுக்கு அவற்றை போதித்தார். தாம் எழுதிவைத்திருந்த குறிப்புகளைத் தமக்கு அனுப்பும்படி அங்கிருந்து எனக்கெழுதினார். அவற்றிற் சில நோட்டுகளிலும் சில துண்டுக்காகிதங்களிலும் எழுதப்பட்டிருந்தன. அதனையெல்லாம் நான் (திரட்டி) சேர்த்து டைப்பில்கொடுத்து (Typewritten Copy) ஓர் நகல் தயாரித்தேன். அவை குருநாதனுடைய உபதேசங்களானமையால், அவற்றை முதலில் நான் குருநாதனிடம் எடுத்துப்போவது நலமென எனக்குத் தோன்றியது. ஆதலால் அவ்வாறே செய்தேன். எங்கள் குருநாதர் அவற்றைப் பார்வையிட்டு, ஆங்கு விடுபட்டிருந்த இரண்டு வாக்கியங்களைப் பூர்த்திசெய்தார். அல்லாமலும், "இதைக்கொண்டு வேறு ஏதாகிலும் நீங்கள் செய்யுமுன்னர் ஜகத்குருவிடம் நாம் இதைக்காட்டுவோம்" எனவும் மொழிந்தார். அப்பரமரிடம் எங்கள் குருநாதர் சென்றபொழுது நானும் கூடச் சென்றேன். பிரபுவோ அதைப் படித்தபின்னர் (சரியென) ஆமோதித்து, அவரே, "நீங்கள் முதல்முதலாய் ஆல்கியோனை உலகிற் பிரசித்தி செய்தற்பொருட்டு இவ்வுரைகளை ஓர் அழகிய சிறு நூலாகச் செய்வியுங்கள்" என ஆக்ஞாபித்தார். அவர் அவ்வாறு கூறுவாரென நாங்கள் நினைத்திருந்தோமில்லை; ஆல்கியோனின் இளம்பிராயத்தைக்கருதி அவரை உலகிற் பிரசித்தி செய்ய வேண்டாமென அதற்குமுன்னர் நாங்கள் ஆலோசித்திருந்தோம். ஆயினும் குப்தவித்தியா மார்க்கத்தில் பெரியோர்

கூறியவற்றிற்கு மீறியும் நடப்பவரெவருளர்! எம்மினும் மிக்காரென எமக்கு விளங்குங்கால் அம்மிக்கார் மொழிக்கு மாறுமுண்டோ? இல்லையே. ஆதலால், கடைசியாய், அப்பரமர் உரைத்ததே மெய்யாய் முடிந்தது. அதுவே நடந்தேறியது. நாங்கள் ஆலோசித்திருந்ததே தவறாயிற்று. நாங்கள் வருமென நினைத்த கெடுதிகள் யாவும் (வந்தெய்தினும்) வந்தபோதிலும், அவ்விளம்பருவத்தின லுண்டான நன்மைகள் தொந்திரவுகளினும் எத்துணையோ மடங்கு மேலாயின. பல்லாயிரம் ஜனங்கள் இச்சிறு கிரந்தம் தங்கட்குச் செய்திருக்கும் நன்மையைப்பற்றிப் புகழ்ந்து, அதனாலேயே தாங்கள் சன்மார்க்கத்தில் நிலைத்து நிற்கின்றார்களெனவும் கூறியிருக்கின்றார்கள். ஆகையால், இக்கிரந்தம் குருநாதனுடைய கருத்தைத் தெரிவிப்பதாகும். அன்பு, அல்லது பிரேமை என்பதே இதன் முதன்மையான தொனியாகும் (Key note). வீடு என்ற மோக்ஷத்தை நாம் பெற வேண்டுமாயின், அன்பென்ற சாதனம் நமக்கு இன்றியமையாதது; ஆயினும், நமது பழக்கங்களிற் பலவும் அன்பைக் கெடுக்கின்ற வைகளே'' (அன்பிற்குப் பகைமையானவைகளே)

—C. W. L.

## II.

பின் வருபவை மேற்குறித்த விஷயங்களைப்பற்றி ஸ்ரீமாந் G. S. அருண்டேல் அவர்களால் இப்பொழுது எழுதப்பட்டு வரும் கர்ரேஸ்பாண்டேன்ஸ் ஸ்டடி ஸீரீஸ் என்னும் ஆங்கிலப் புத்தகத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன:—

"...சற்குரு சரணங்களில் அடங்கியுள்ள போதனமொழிகள்யாவும் ஸ்ரீமான் ஜே. கிருஷ்ணமூர்த்தியவர்களுக்கு, திபேத்திலுள்ள எங்கள் குருநாதர் கிருஹத்தில் அளிக்

கப்பட்டிருக்கலாமென நான் முன்னரேயே கூறியுள்ளேன். ஆசியா படத்தை வைத்துக்கொண்டு, இமயமலைக்கு வட பாகத்திலுள்ள திபேத்து என்ற நாட்டை நீங்கள் நோக்கு வீர்களாயின், ஷிகாட்ஸ் (Shigatse) என்ற ஓர் நகரத்தின் பெயர் அங்கிருக்கக்காண்பீர்கள். அதனருகிற்றான் எங்கள் குருநாதர் தூலதேகத்தோடு வசிக்கின்றார். ஆல்கியோனே தென்னாட்டில் சென்னைக்குப் பக்கத்திலுள்ள அடையாற்றில் வசித்து வந்தாராதலால், தூலதேகத்தில் குரு சீடரிருவரும் சந்தித்து உபதேசம் அளிப்பதும் பெறுவதும் சாத்தியமில்லாதிருந்தது, முடியாமற் போயிற்று. அடையாறு, உலகிலுள்ள பிரஹ்மஞ்ஞான சபைகட்கெல்லாம் தலைமையானவிடம். அந்தக் கிராமத்திற்கு அது ஓர் பெருமையே. அதனருகில் ஓர் பக்கத்தில் கடலுமுள்ளன. ஆங்கு, சபையின் பற்பல உழைப்பாளிகளான அங்கத்தினர் தங்கும்படியாக இடம் அமைக்கப்பட் டிருக்கின்றது. ஹேட்குவார்டர்சை அடுத்து பல மாடங்கள் உள்ளன. முதல் மெத்தையில் நமது சபையின் அக்கிராசனாதிபதி வசிப்பார். மற்றவர்களுடைய வாசஸ்தானங்கள் அதன் பக்கத்திலிருந்தன. மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்களுடைய மாடத்திற்கருகில், ஸ்ரீமான் ஆல்கியோனும் அவரது இளைய சகோதாராகிய ஸ்ரீமான் நித்தியானந்தரும் வசித்து வந்தனர்.

ஸ்ரீமான் C.W.லெட்பீடரவர்களுடைய பெரியவாசஸ் தலம் (அறை) அங்கேயே சற்று விலகியிருந்தது. அவரிடமிருந்து, பிரதி இரவிலும் சீடர்கள் தங்கள் தூலதேகத்தை விட்டு அகன்று பனிமலையெனப் பெயர்பெற்ற ஹிமாசலத்திலுள்ள தங்கள் குருநாதருடைய ஆசிரமத்திற்கேகினர்,

அங்கு அவர்கள் ஸ்தூலதேகத்திற் செல்லுவதாயிருந்தால் பன்னாட் செல்லும்; ஆயினும், புவர்லோக சஞ்சாரிகளோ (வாஸிகள்) நினைத்தமாத்திரஞ் செல்லும் ஆற்றலைப் பெற்ற வர்கள். நமது யாத்திரிகர்கள் அவ்விடத்தை நோக்கிச் செல்லுங்கால், பலவிடங்களில் நின்று, புவர்லோக விநோத ங்கள் காட்சிகள் இவற்றைக்கண்டும், துன்புறும் ஆன்மாக்க ளுக்கு உதவிபுரிந்தும், அத்தலத்தை நாடிப் பிரயாணஞ் செய்தனர். ஆயினும், குருநாதருடைய கிருஹத்திற்குச் செல்வதில் தாமஸஞ் செய்தனரில்லை. ஏனெனில், அவர் எப்பொழுதும் மிகுந்த அலுவலுள்ளவர். நமது அசட் டையால் அவரைக் காக்கவைப்பது சரியன்று. சுமார் பதி னைந்து நிமிஷநேரமே ஆல்கியோனுக்கு அவர் உபதேசம் புரிந்தருளுவார். அதிகநேரம் அதற்கெனச் செலவு செய் யப்படவில்லை. இதன் பின்னர் சீடர்கள் குருநாதரிடம் விடைபெற்றுத் திரும்பியதும், இரவு முழுதும் ஸ்ரீமான் லெட்பீடரவர்கள் ஆல்கியோனின் சூக்கும தேகங்கள னைத்தையும் பிற்காலத்தில் அவர் ஏற்கவேண்டிய வேலையின் பொருட்டுச் செவ்வனே பழக்கிவைப்பார். இவ்விதம் பல (நூதன) உபயோகமுள்ள அநுபவங்களை ஆல்கியோன் பெ ற்றுக்கொண்டனர். காலையில் $5\frac{1}{2}$மணி சுமாருக்கு, ஆல்கி யோன் தனது (ஸ்தூல) சரீரத்திற் பிரவேசித்து "விழித் துக்கொள்வர்" உடனே குளித்து, உண்டு, தனக் களிக்கப் பட்ட பாடங்களை முடித்து, அம்மையாரவர்களின் (அரை) மாடத்திற்குச் சென்று, அவர்முன், தாழ்வாரத்திலுள்ள ஓர் மேஜையண்டை உட்கார்ந்து, குருநாதர் இரவில் மொழிந் திருந்தனவற்றை மிகக் கருத்துடன் தானே எழுதுவார். குருஸ்வாமி அவர்களோ சீடருக்கு இரவில் தாம் கால்மணி நேரம் கற்பிக்கும்பொழுது உபதேசித்தவற்றைச் சேர்த்துச்

கடைசியாய் அப்பொழுதே ஓரே வாக்கியத்திலடக்கிக் கூறி விடுவது வழக்கம். இவ்வண்ணமேதான் "சற்குரு சரணங்களில்" என்னும் நூல் எழுதப்பெற்றது......". (G. S. A.)

மேற்கூறிய அரிய கிரந்தம் வெளியாக்கப்பட்ட கால முதலாய் இதுகாறும் அதனைப்பற்றிய விவரணங்களிற் பலவும் வெளியுலகிற்கு வந்தனவில்லை. தற்காலம் நமது சபையின் தலைவர்கள் அவற்றைப் பிரசுரம் செய்ததின் காரணம் யாதென நாம் விசாரிக்கப்புகின், சில பக்குவ ஜீவர்களின் பிரயோஜனார்த்தமே அவ்வாறு செய்யப்பட்டதென நமக்கு நன்கு விளங்குவதாகும். இதனின்று ஏனையோர் மனதிற்குப் புலப்படு முண்மையு மொன்றுளது. அஃது, ஒடுங்கிய அறிவும், கோழைமனமும் குறுகிய இன்பமுமுள்ள நாம் நமது சித்தத்தைச் சுத்திசெய்து, ஊக்கத்துடன் உலகிற் குழைத்து, நமது சிறுவாழ்வை யொழித்து பெரியோரைப் பேணிப், பெருவாழ்வை நாடவேண்டுமென்பதேயாம். அதன்பொருட்டு நாம் ஒவ்வொருவரும் இடைவிடாது பிரயத்தனஞ்செய்து வருவோமாக.

ஓம் தத் ஸத்.

சார்லிதாசன்.

---

## நன் மொழி

---

"தூயநற் செழு மலர்க் கமல முகமும்,
தேனினும் மிகவினிய சத்தியத் சொல்லும்,
அன்பிற் பெருகிய தூயநற் சிந்தையும்,
நுணுக்கமறிந்து பிறர்குபகாரமும்"

குருநாதர்களை வழிபடும் சிஷ்யர்களனைவரும் பின்பற்றுதற்குரியனவாகும். இவ் அம்சங்களிற் குருநாதர்கள் பூரணரன்றோ?

(304-ம் பக்கத்தொடர்ச்சி)

---

சுந்—(உட்கார்ந்து) நாதா, இதென்ன ஒருமாதிரியாயிருக்கிறீர்களே. ஏதோ கவலைப்படுகிறீர்கள் போல் தோன்றுகிறதே. என்ன விசேஷம்?

கும்—சுந்தரீ, இதற்குக் காரணம் நானுனக்குச் சொல்லவும் வேண்டுமோ? உனக்குத் தெரியாதா?

சுந்—நானெதைக்கண்டேன், எனக்கென்ன தெரியும்?

கும்—என்னடி, நீ சொன்னதை நீயே மறந்தனையோ?

சுந்—என்ன நாதா, கொஞ்சம் வியக்தமாய்ச் சொல்ல வேண்டும். எனக்கிப்படியெல்லாம் சொன்னாலொன்றும் தெரியாது. (ஒரு புறமாக) எனக்கா தெரியாது?

கும்—இந்த மீராவைப்பற்றி நீ சொன்னதை நீயே மறந்து விட்டாயா?

சுந்—(ஆச்சரியத்தை நடித்து) நாதா, அந்த சமாசாரத்தையொரு பொருட்டா யெண்ணி நீங்கள் கவலைப்படலாமோ. நாதா, அதை மறந்துவிடுங்கள். வீண்கவலை வேண்டாம்.

கும்—என்ன சுந்தரீ, நீயிப்படிப் பேசுகிறாய். இது மறக்கக்கூடிய சாதாரணமான விஷயமா? எனது கௌரவத்துக்கு ஹானி வரும்போலிருக்கும்போது நானெப்படிக் கவலைப்படாமலிருப்பது? இந்த மீரா தனக்கர்ஹமில்லாத காரியங்களைச் செய்து தன்னுடைய கௌரவத்தையும் என்னுடைய பெருமையையும் குறைக்கிறாளே.

சுந்—நாதா, தனக்கர்ஹமில்லாதபடி அவள் எதைச் செய்ததாக நாமறிந்தோம். உலகத்திலொரு விஷயத்தைக் குறித்து நாலுபேர் நாலுவித அபிப்பிராயம் கொள்ளுவார்கள். அவைகளைக் குறித்து நாம் வருத்தப்படலாமோ? இந்நகரத்து ஜனங்களில் சிலர் மீராவைத்தூஷித்தாலும் யாராவது சிலரொருவேளையவளைப் புகழ்ந்து கொண்டிருந்தாலுமிருக்கலாம். இவ்விஷயத்தில் நீங்கள் மனக்கவலை கொள்ளக்கூடாது.

கும்—சுந்தரீ, உனக்குத்தெரியாது. அரசர்கள் முக்கியமாக லோகாபவாதத்துக்குப் பயப்படவேண்டும். மேலுமிவ்விஷயத்திற் பெரும்பான்மையோர் மீராபாயைப்பற்றிக் கெட்ட அபிப்பிராயம் கொண்டிருப்பதாக உன்வார்த்தைகளினின்றும் தெரிய வருகிறது. அப்படியிருக்க, நான் கவலைப்படாமலிருக்க முடியுமா?

சுந்—(தனக்குள்) நான் சாதாரணமாக வைத்த கொள்ளி பலமாய்ப் பிடித்துக்கொண்டு விட்டாற் போலிருக்கிறது. (வெளிப்படையாக) நாதா, அதெப்படியிருந்தாலும் சரி, நீங்கள் மீராபாயிடத்தில் கோபங்கொள்ளக்கூடாது. அவளை யென் சகோதரிபோல் பாவித்து வருகிறேன். அவளைத் தாங்கள் கண்டித்தாலெனக்கு வருத்தமாயிருக்கும். நீங்களே னிவ்விஷயத்திலிவ்வளவு கவலைப்படவேண்டும்? தங்கள் மனது தெரிந்து தன் நடத்தையைச் சீர்திருத்திக் கொள்ளமாட்டாளோ அவள்?

கும்—கெட்ட நடத்தையைச் சீர்திருத்திக்கொள்ளவாவது, அது நடக்கக்கூடிய காரியமா? நடந்தாற்றான் பிரயோஜன முள்ளதா?

சுந்—எல்லாவற்றிற்கும் தாங்களவசரப்படவேண்டாம். நிதானித்து யோசனை செய்து ஓரேற்பாடு செய்யவேண்டும். ஞானவளோடு கலந்து பேசிப்பார்க்கிறேன்.

கும்—என்ன கலந்து பேசப்போகிறாய்? அதனாலென்ன பிரயோஜனம் வரக்கூடும்? என்னவோ, வேண்டுமென்றால் பேசிப்பார். அதனாலொன்றும் வெளிவருமென்றெனக்குத் தோன்றவில்லை.

(திரை விழுகிறது)

(காட்சி முடிகிறது)

---

## நன்மொழி.

---

ஈசுவரனின் அருட் பிரவாஹத்திற்கு, உன் குருநாதர் ஓர் வாய்க்காலாக அமைந்திருப்பது போலவே, நீயும் உன் குருநாதரின் கிருபாகடாக்ஷத்திற்கு ஓர் வாய்க்காலாயமைந்து, பிறர்க்கும் ஆனந்தம் விளைவிக்க விரும்புவாயாகில், முகமலர்ச்சியோடிருப்பாயாக.

# மீராபாய்.

## அங்கம் 2 களம் 1.

---

காலம்—மாலை.

இடம்—கிருஷ்ணாலயத்துக்குப் போகும் வழி.

நாடகபாத்திரர்கள்—குமாரசிங், ஆனந்த சாஸ்திரி.

---

சாஸ்—ஓய், ஸ்வாமிந், ஸ்வாமிந்!

(கையைத் தட்டுகிறார்.)

குமா—என்ன காணும்? இவ்வளவவசரமாய்க் கூப்பிடுகிறீரே.

சாஸ்—கோபித்துக்கொள்ளாதேயும், ஸ்வாமீ. அதோ ஜனங்கள் கூட்டங் கூட்டமாய்ச் செல்லுகிறார்களே. அவர்களெங்கே செல்லுகிறார்கள்? என்ன விசேஷம்? ஏதாவது பெரியவிடத்துக் கலியாணமுண்டா? நல்ல பூரிதக்ஷிணையுண்டோ?

குமா—என்ன உளருகிறீர்? ஓய் நீரெந்தவூர்? இவ்வூரல்லவோ?

சாஸ்—நான் அயலூர்.

குமா—அயலூர் என்றால் எந்தவூர் ஓய்?

சாஸ்—இங்கேதான், பக்கத்தில்தான், சமீபம்தான்.

குமா—எந்தவூரென்றுவிதையெல்லாம் யாரையாகேட்டார்கள்? ஊர்ப் பெயரைச் சொல்லும்.

சாஸ்—என்ன ஸ்வாமின்? இவ்வளவு கோபங்கொள்ளுகிறீரே. ஊர் பெயரைத்தான் சொல்லப்போகிறேனே, அதற்குள்ளே என்ன அவசரம்?

344



குமா—ஓய், உம்மோடு வீண்காலங்கழிக்க எனக்கு சாவகாசமில்லை. நான் போகிறேன்.

சாஸ்—ஸ்வாமிந், ஸ்வாமிந்! (உரக்கக் கத்துகிறார்)

குமா—ஏன் ஓய், என் கழுத்தையறுக்கிறீர்?

சாஸ்—என்னூர்ப் பெயரைக் கேட்காமற் போகிறீரே.

குமா—கேட்டெனக்கென்ன ஆகவேண்டும்? சொல்ல வேண்டுமென்றால் சீக்கிரம் சொல்லித்தொலையும்.

சாஸ்—என்ன ஸ்வாமி, இவ்வளவு கோபம்!

குமா—ஓய், உமக்கு வேறு வேலையில்லை. எனக்கவசரமாய்ப் போகவேண்டும். எதற்காக என்னைத் தொந்தரவு செய்கிறீர்?

சாஸ்—உம்மை நான் தொந்தரவு செய்யவில்லை ஸ்வாமிந்! என்னூர்ப்பெயரைக் கேட்டுவிட்டு அதையறியாமற் போகிறீரே.

குமா—சொல்லித்துலையும், ஓய்.

சாஸ்—என்னுடைய ஊர் இந்நகரத்துக்கு நிரம்பவும் சமீபம். சுமாரேழு மைல் தூரமிருக்கும்.

குமா—பெயரென்ன ஓய்?

சாஸ்—சொல்லுகிறதற்குள்ளென்ன அவசரமுமக்கு? என்னூர் என்னுடைய ஊர்தான்.

குமா—இதைச் சொல்லவா என்னை இவ்வளவு நேரம் காக்கவைத்தீர். போம் ஓய், வேலையில்லாதவரே!

சாஸ்—ஸ்வாமிந், இதென்ன? இன்னமுமக்கென்னூரின் பெயர் தெரியவில்லை.

குமா—(கோபத்துடன் பார்த்துவிட்டுப் போக முயலுகிறான்.)

சாஸ்—(அவரைத்தடுத்து) என்னுடைய ஊர்தான் ஸ்வாமி என்னூர். என் பெயருமக்குத் தெரியாதா?

குமா—நீர் யார் ஓய்?

சாஸ்—என்னையுமக்குத் தெரியாதா? ஆனந்தபுரத்திலென்றால் ஒவ்வொருவருக்கு மென்னைத்தெரியும்.

குமா—அப்பா, உம்மூர்பெயரைச் சொல்லித்துலைத்தாயிற்றல்லவோ?

சாஸ்—ஆனந்தபுரந்தான் ஸ்வாமி என்னூர். என் பெயருமானந்த சாஸ்திரிகள். ஆகையால்தானென்னூரென்னுடைய ஊரென்றேன்.

குமா—வெகு புத்திசாலி, உமது மூளையை யெங்கேயாவது கடன் கொடுத்திருக்கிறீரோ?

சாஸ்—ஸ்வாமி, நானொருவருக்கு மொன்றும் கடன் கொடுத்ததே கிடையாதே.

குமா—(புன்னகையோடு) சரிதான், இருந்தாலல்லவோ கடன் கொடுப்பீர். நான் போகிறேனையா.

சாஸ்—ஸ்வாமி, நான் முதலிற் கேட்டதை மறந்து விட்டீரே.

குமா—என்ன?

சாஸ்—அதோ ஜனங்கள் கூட்டங் கூட்டமாய்ச் செல்கிறார்களே, எந்த விவாஹத்துக்குப் போகிறார்கள்? கொஞ்சம் தயவுசெய்து சீக்கிரம் சொல்லும்.

குமா—நீருமுடைய ஊர்ப் பெயரைச் சொன்ன மாதிரியா?

சாஸ்—ஆமாம் ஸ்வாமீ நான் உம்முடைய அவசரம் பொறுக்கமாட்டாமலல்லவா சீக்கிரமென்னூர்ப் பெயரைச் சொல்லிவிட்டேன். நீருமந்த மாதிரி சீக்கிரம் சொல்லும்.

குமா—நானுமும்மைப்போல் வேலையற்றவனா?

சாஸ்—(அதைக்கவனியாமலொருபுற முற்றுப் பார்த்து) என்ன கூட்டம்! தக்ஷிணை பலமாயிருக்குமென்று நம்புகிறேன். ஸ்வாமி, சீக்கிரம் சொல்லும்.

குமா—நல்ல புத்தி ஓய் உமக்கு! பொழுது விடிந்தாற் பணம் தேடுவதைத் தவிர வேறு வேலை கிடையாதோவுமக்கு? ஏனிந்த ஜன்மத்தை வீணுய்க் கழிக்கிறீர்? நமக்கேனிந்த மநுஷ்ய ஜன்மத்தைக் கொடுத்தது? பணம் சம்பாதிப்பதற்கா? தம்மையடைய வேண்டியதற்குரிய வழிகளைத் தேடும் பொருட்டு நமக்குப் பகுத்தறிவைக் கொடுத்து, நாம் தவறும் பக்ஷத்தில் நம்மைச் சீர்திருத்திச் சரியான வழிக்குக் கொண்டுவர அப்போதைக்கப்போது தாமவதரித்தோ அல்லது தமது பக்தகோடிகளில் யாரையாவதவதரிக்கச் செய்தோ, நம்மைப் பாதுகாத்துவருகிற ஈச்வரனை மறந்து, விஷயங்கள் நிறைந்திருக்குமிந்த பவசாகரத்தில் மூழ்கி பஞ்சேந்திரியங்களுடைய வியாபாரங்களுக்கீடுபட்டு பேராசை முதலிய துர்க்குணங்களுக்கடிமையாகி நாம் நல்ல கதியை யடையும்படியான மார்க்கத்தி லிடையூறுகளைத் தேடிக்கொள்வது நியாயமா? ஏன் வீணுய்க் கெட்டுப்போகிறீர்? என்னுடன் வாரும், அந்த ஸ்திரீ ரத்நத்தின் பக்தியைக் கண்குளிரப்பாரும்.

சாஸ்—ஸ்திரீயாவது பக்தி செய்யவாவது; அது யார் ஐயா?

குமா—ஸ்திரீ பக்தி செய்து மோக்ஷத்தையடையக் கூடாதோ?

சாஸ்—நமது ஸ்மிருதியின்படி ஸ்திரீகளுக்கும் பிராஹ்மணர்களல்லாதவர்களுக்கும் மோக்ஷமார்க்கத்தை யநுசரிக்க அதிகாரம் கிடையாது.

குமா—என்ன ஓய், பதினெட்டாம் பசலியாசாமியாயிருக்கிறீரே. வியாசர் மஹா பாரதத்திலும், பகவான் கீதையிலும்இன்னும்மற்ற மஹான்களனேக கிரந்தங்களில் சொல்லியிருப்பதையுமறிந்ததில்லையோ நீர்? எந்த வர்ணத்திலானுலும், எந்த ஆச்ரமத்திலானுலும், எந்த தேசத்திலானுலும், எந்த மதத்திலானுலும் ஸ்திரீயாயிருந்தாலும் புமானுயிருந்தாலும் யோகமார்க்கத்தில் திடமாய் நின்ருல் கட்டாயம் முக்தி கிடைக்கும். ஆகையாலிந்த லோகமாதாவுக்கு பகவத் பக்தி செய்ய அதிகாரமில்லையென்பது தவறு. மேலும் அவள் பக்திசெய்வதை நீர் கண்ணுறக்கண்டால் பிறகு உமக்கு எல்லாம் தெரியவரும். நாம் புருஷர்களாய்ப் பிறந்தென்ன? அவளுடைய பக்தியிலாயிரத்தி லொரு பங்குகூட நமக்கில்லையே. அவள் பக்தி செய்வதைக் கண்டு மனமுருகாதவர்களிதுவரையிற் கிடையாது. அதோ அங்கே போய்க்கொண்டிருக்கிறவர்களெல்லாரு மிந்நகரத்துக்கு வெளியிலிருக்குமோர் கிருஷ்ணுலயத்துக்குச் செல்லுகிறுர்கள். அங்கேதான் தினம் காலையில் மீராபாய் பஜனை செய்வது வழக்கம். நானுமிப்போதவிடம்தான் போகிறேன். உமக்கென்னுடன் வர இஷ்டமிருந்தால் வாரும். உம்முடைய ஜன்மம் சபலமாகும்.

சாஸ்—என்ன ஸ்வாமி, ஒரு ஸ்திரீ பக்திசெய்வதைக் குறித்திவ்வளவு சிலாகித்துப் பேசுகிறீர்? அவளுக்கென்ன ஞானமிருக்கக்கூடும்? எப்படியிருந்தாலும் ஸ்திரீ ஸ்திரீதானே. அவளுக்கு வேதாந்த விசாரணை செய்யத்தெரியுமா, தர்க்கம், மீமாம்ஸை, வியாகரணம் முதலியவைகளைக் குறித்து வாதிக்கும்படியான சக்தியுண்டா? கீதையிலொரு

சுலோகத்தை யெடுத்து விஸ்தரிக்க சாமர்த்தியமுண்டா? அதற்கதிகாரமுண்டா? இவைகளெல்லாமிருந்தாலன்றோ அவள் ஜனங்களுக்கு பக்தியைப்புகட்ட யோக்யதையுள்ளவள்!

குமா—ஓய், நாலைந்து வார்த்தைகளை கற்றுவைத்துக்கொண்டு என்ன உளரு உளருகிறீர்? பகவானைக்குறித்து பக்தி செய்ய தர்க்கமெதற்கு, மீமாம்ஸையெதற்கு? ஈச்வரனிவைகளுக்காகவா சந்தோஷப்படுகிறார்.

"ஹ்ருதி: ப்ரிய: ஸ்ரீவதி:"

ஈச்வரன் பக்தியொன்றுக்குத்தான் கட்டுப்படுகிறார். மேலும் கீதையைப் படிக்க ஏதோ அதிகாரம் வேண்டுமென்று சொன்னீரே. பிராமணனைத்தவிர வேறொருவருமதைத் தொடக்கூடாதோ? என்ன நிர்ப்பந்தமையா! கீதையையுபதேசம் செய்தவனிடையன், கேட்டவன் மடையன், இதைப் பிராமணனைத் தவிர வேறொருவரும் படிக்கக்கூடாதாம் ஏனோயிப்படிப் பிதற்றிக்கொண்டு உலகத்தைக் கெடுக்கிறீர். பகவானுக்கு, அவருடைய குழந்தைகளாயிருக்கிற நம்மிடத்தில் வித்தியாசமுண்டா? அவருக்கு ஸ்திரீ யென்றும் புமானென்றும், கிருஸ்தவனென்றும் மகம்மதீயனென்றும், பேதமுண்டா?

"ஸமோஹம்ஸவ்ருதேஷு
நமேத்வேஷ்யோஸ்திநப்ரிய:"

என்று பகவான் கூறியிருக்கிறார். ஜனங்களெந்தெந்த மார்க்கதில் நின்று எப்படி யெப்படியவரை பஜிக்கிறார்களோ, அததற்குத் தக்கபடியவரை யநுபவிக்கிறார்கள்.

சாஸ்—காலமிப்படிக் கெட்டுப்போய் விட்டதா? கிருஸ்தவனும் நானுமொன்றா? என்ன அநியாயமையா இது?

குமா—கிருஸ்தவனும் நீருமொன்றென்று யாரையா சொன்னூர்கள்? நாமெல்லாரும் பகவானுடைய குழந்தைகளானபடியால் சகோதரர்களாயிருக்கிறோம். சகோதரபாவமென்றால் சமத்வமென்றர்த்தம் பண்ணுகிறீரே. யூகித்துப் பார்த்தால் சகோதர பாவத்தால் சமத்வமில்லை யென்பதல்லவோ விளங்குகிறது. ஒருவனுக்கைந்து குமாரர்களிருந்தாலந்த ஐந்து சகோதரர்களுமொரேமாதிரியிருப்பார்களோ ? வயதிலேயும் புத்தியிலேயும் ஞானத்திலேயுமவர்களுள் வித்தியாசமுண்டல்லவா? அப்படியிருந்தாலும் தாங்களொரு பிதாவின் குமாரர்களென்பதை மறக்காமலெப்படி யொருவரையொருவர் நேசித்து வருகிறார்களோ, அதே மாதிரி நாம் சகல ஜீவர்களையும் நம்முடைய சகோதரர்களென்றெண்ணிஸர்வபூத ஹிதோரதர்களாயிருக்க வேண்டும்.

(ஜயசிங்க் வருகிறான்)

ஜய—குமாரசிங், மீராபாய் கிருஷ்ணாலயத்துக்குப் போய்விட்டாளையா. இங்கே நின்றுகொண்டிருக்கிறீரே.

குமா-(திடுக்கிட்டு) இவருடன் பேசிக்கொண்டே நின்றுவிட்டேன், ஞானமில்லாதவர்களுக்கு நமக்குத் தெரிந்தவரையில் ஞானத்தை யளிக்கவேண்டுமென்றடிக்கடி நமதன்னை நமக்குச் சொல்லியிருப்பதை முன்னிட்டு இந்த சாஸ்திரியாருக்குச் சில விஷயங்களைச் சொல்லிக்கொண்டிருந்தேன், ஓய் சாஸ்திரியாரே, என்னுடன் வருகிறீரா? எனக்கு நேரமாய்விட்டது; நான் போகிறேன்.

சாஸ்—இதோ, நானும் வருகிறேன்.

(எல்லோரும் போகிறார்கள்)

(காட்சி முடிகிறது.)

(இன்னும் வரும்.)

R. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A.

# பெற்றோர்களுக்கும் உபாத்யாயர்களுக்கும் ஓர் விக்ஞாபநம்.

---

## "சிறுவரிடத்து நம்மவர் கடமை."

உலக சரித்ரத்தில், இக்காலத்தில், ஓர் அபிப்பிராயம் அல்லது ஓர் சிலாக்யமான கொள்கை ஒரு தேசத்தில் வியவஹரிக்கப்படுமானால், அது விரைவில் இப்பூலோகத்தின் எல்லாப் பாகங்களிலும் பரவிவிடுகின்றது. அத்தகைய கொள்கைகளில், இதன் தலைப்பெயரிட்ட விஷயமும் ஒன்றேயாம், இப்போது எத்தனையோ விதங்களில், இஹலௌகிக வியாபாரங்களிலும் நாகரிகத்திலும் தேர்ந்துவிளங்கும் அமெரிக்கர் தமது ஸ்வதேசக்ஷேம அபிவிருத்திக்குரிய கார்யங்களில், முதன்மையாகக் கருதி கவனித்து வருவது, தம் தேசத்துச் சிறுவர்களின் க்ஷேமத்தைப் பற்றியேயாம். ஏனெனில், "ஒரு தேசத்தின் வருங்காலத்திய மஹிமைக்கும் பெருமைக்கும் அத்தேசத்துச் சிறுவர், சிறுமியர்தானே சுதந்திரர்." ஆகையால், வருங்காலத்தில் உபாத்யாயர்களாகவும், உபாத்யாயினிகளாகவும், வைத்யர்களாகவும், சிறந்த விற்பன்னர்களாகவும், கவிவாணர்களாகவும், தேர்ந்த காயகர்களாகவும், கைத்தொழில் திறத்தில் வல்ல எத்தனையோவிதமான கலாவல்லவர்களாகவும், இராஜதந்த்ரங்களின் நுணுக்கங்களை எளிதில் மநத்தாற் கிரஹித்து வியவஹரிக்கக்கூடிய மேதாவிகளாகவும், சற்றும் மநம், மொழி, மெய் தளராது உழைக்கும் பரோபகாரிகளாகவும் விருத்திக்கு வரக்கூடியவர்கள் இப்போதிய வாலிபர்களான ஆண், பெண் மக்களுள் அநேகர் இருக்கக்கூடுமன்றோ! எத்தேசத்திலும் எச்சாதியாருள்ளும் தோட்டி முதல் தொண்டைமான்வரை, படிப்படியான அந்தஸ்துகளிலுள்ள ஒவ்வொரு அற்ப மனிதனும் அவசியமேயாவான். ஆதலால், பொது நலத்திற்கு அநுகூலமாக, பிரதி மனிதனும் அவனவன் திறத்

திற்குத்தக்கபடி ஸ்வபாவமாகவே உழைத்துவரும்படி, நாம் நம்து வாலிபர்களைப் பழக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இதையநேகர் அற்பமென்று நினைத்து அலக்ஷியஞ் செய்கிறார்கள். இவ்வுலகில் அற்பமென்பது ஒன்றுமே கிடையாது. இப்போது அற்பமாய்க் காணப்படுவது நாளடைவில் அதியற்புதமான பெருமையை விளக்குகின்றது. கறையான் அற்பமானதுதானே. எத்தகைய பெரிய உத்திரங்களையும் உள்ளூர்ந்து தொளைத்துத் தொப்பையாக்குகின்றதல்லவா? காலராக்கிருமிகள் அற்பமானவைதானே. அவைகள் மனிதன் உடலிற்புகுமானால் ஜீவஹானியை யல்லவோ விளைக்கின்றன; தேனீக்கள் அற்பமானவைதானே. எவ்விதம் இனியதேனை நானாவித புஷ்பங்களினின்றும் சேகரித்துச் சாவதானமாய்த் தேன் ராட்டுகளில் பத்திரப் படுத்துகின்றன. ஒளவையார் கூறியபடி,

"தெள்ளியவாலின் சிறு பழத்தொரு விதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயா யினு மண்ணல் யானை
யணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலாகும் மே."

என்பதை நாம் உணராதவர்களல்லரே! ஓர் விதத்தில் யோசிக்குமளவில், உணர்ந்தும் உணராதவர்களாகவே யிருக்கிறோம். ஏனெனில் நாம் உணர்ந்த தக்ஷணமே, நம்முணர்வுக்குத் தக்கபடியல்லவோ நடக்க முயலவேண்டும். அவ்விதம் முயலுவதற்குமுன், நாம் முயற்சிக்கவேண்டிய வழியைப் பற்றிப் பூர்ணஞானம் பெறுவிடின், நமது முயற்சியனைத்தும் வீணாகுமென்பதை எவருமறிவார்.

அநேகமாய் நமது கார்யங்கள் நேர்மையாய் நடைபெறாததற்குக் காரணம், அவைகளைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து

அறியாமல் கார்யத்திலிறங்குவதேயாகும். ஆதலால், "சிறுவரிடத்து நம்மவர் கடமை" என்னவென்றறிந்து கொள்வதற்கே, பரம ஆதாரமான சில தத்துவங்களையறிதல் வேண்டும். இத்தத்துவ ஞானோபதேசங்கள் நம்மிந்தியா தேசத்தில் நாளிதுவரை மங்காத மணிவிளக்காய்ப் பிரகாசித்து வருகின்றன. மற்றைய தேசம் எதுவும் இவ்வம்சத்தில் இப்போது சற்றுத் தாழ்வாகவே யிருக்கிறது. மற்றையத் தேசங்களிலுள்ள ஓர் பிதான அம்சமும் நம் தேசத்திலுமில்லை. அதாவது, இஹலௌகிக வாழ்க்கையில், சுறுசுறுப்பும்,பரப்பும்தான் என்றறிக. இன்னவிடத்திற்குச் செல்கிறேமென்ற பிரக்ஞையில்லாமல் பரபரவென்று அதிவேகமாய்ச் செல்லும் அறிவீனனுக்குச் சமானமாய் மேனாட்டாருடைய பரபரப்பையும், வீண் மனோராஜ்யம் செய்துகொண்டு யாதொரு சிறுவேலைக்கும் உபயோகப்படாத பித்தனுக்குச் சமானமாய், நம்மிந்தியர்கள் மூழ்கிக்கிடக்கும் தமோ குணத்தையும் ஒப்பிடல் தகும்.

இனி நமதார்ய மதமானது என்னென்ன பரமார்த்த ரஹஸ்யங்களைக் கூறுகின்றதென்பதையும், அவற்றை நம் நாட்டார் எவ்விதம் பிரயோஜந மற்றவைகளாக்கி வருகின்றனரென்பதையும் ஒருவாறு சொல்லுவேன். நாம் எல்லோரும் ஒரு ஸூர்யமண்டலத்தின் ஈசுவரனது ஆஞைக்குட்பட்டவர்கள்; அவ்வகண்ட தூயஒளியினின்றும் வெளிவந்த பொறிகளாவோம். ஆகையால் நாமும் பெருஞ் ஜோதியாகி, அவரைப் போலவேயாகி, அவருடனே ஒருமைப்படலாம். அவரிடத்தே ஐக்யமாகலாம். அந்த ஈசுவரன் ஒருவரேதான். ஆயினும் மும்மூர்த்திகளாக விளங்குகிறார். அந்த ஈசுவரன் பிரகிருதியில் அநுப்பிரவேசம் செய்தார். அதனால்தான் உலகில் எண்ணிறந்த ஜீவராசிகள், அவைகளது அறிவின் தகைமையில் படிப்படியான தாரதம்யத்துடன் விளங்குகின்றன. அச்சீவராசிகளில் மநுஷ்யர்கள்

ஓர் சிரேஷ்டமான வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மநுஷ்ய வர்க்கமானது பல ஜன்மங்கள் எடுத்து எடுத்து, பிரக்ஞையின் விகாஸம் (மலர்ச்சி) பெற்றும், அதற்கேற்ப சரீரங்களும் சுபமான கருவிகளாய் உபயோகப்படுமாறு பரிபக்குவ மடைந்தும், விருத்தியடைகிறது. இம்முறையே, புநர் ஜந்மங்களால் அடையும் விகாஸமுறை யென்று கூறப் படுகிறது. அவ்வபிவிருத்தியானது அவரவர்கள் கருமத்தைப் பொறுத்து நிகழ்கின்றது. அதாவது, "எக்கருமமும் அதற்குரிய பலனை விளைத்தேதீரும்." என்ற விதியே கருமத்தின் நியதியாம். இவ்வித கர்மங்களை விதைப்பதும் அறுப்பதும் மூவுலகங்களில் நிகழ்கின்றன. அவை பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்பனவாம். இம்மூன்றுலகங்களிலும் படிக்கவேண்டிய பாடங்களனைத்தையும் முற்றக் கற்றுணர்ந்து பூர்ணம் பெற்றவர்களே முக்தர்களென்று அழைக்கப் பெறுவர். அந்த முக்தர்கள் மேற்கூறிய மூவுலகங்களிலும் பிறந்திறந்துழலும் மானிடர்களையும் தம்மைப்போன்ற பதவிக்கு அழைத்துச்செல்ல வல்லவர்கள், அழைத்துச்செல்லும் கருணையுடையவர்கள். ஏனெனில், ஆக்குதல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலை நடத்துவதிலேயே விழிப்பாயிருக்கும் ஈசனது சங்கற்பத்தையறிந்தவர்கள். அதனால் அவ்யாஜமாக உழைத்து வருகிறார்கள். அவர்களுடைய இடையறாவுழைப்பும், அபாரமான கருணையும், உயர்தர ஞானமும் நமக்கறிவுறுத்தும் படிப்பினையென்ன? நாமும் சுயநயங்கருதா உழைப்பையும், கைம்மாறு கருதா அன்பையும், பிறர்க்குபகரிப்பதற்கேற்ற ஞானத்தையு மல்லவோ கைக்கொள்ளவேண்டும்?

நாம் சிறுவர்கள் என்று கூறும்போது, என்ன கருத்தைக்கொண்டு கூறுகிறோம். சரீர வளர்ச்சி யடையாத இளம்பருவத்தி லுள்ளோர்களைச் சிறுவர்களென்றழைக்கிறோம். இந்த ஜன்மத்தில் சிறுவர்களாகத் தோற்றலாம்,

அவர்கள் நம்மைக்காட்டிலும் எத்தனை முன் ஜன்மங்கள் அதிகமா யெடுத்திருக்கிறார்களோ? அதை நாம் அறிகிலோம். அவற்றின் பயனாக எவ்விதத்தகைமைகளை யடைந்து, இச்சன்மத்தில் இன்னும் என்ன தகைமைகளை விருத்தி செய்து கொண்டுபோவார் என்பதையும் அறிகிலோம். இவ்வறிவீனத்தால் நம்மவர்கள் செய்யும் தவறுகள் கணக்கு வழக்கல்ல. "சிறியோரெல்லாம் சிறியருமல்லர்." என்னும் ஔவை முதுமொழி இங்கு கவனிக்கத்தக்கது. உதாரணமாக பெரிய தத்துவசாஸ்திரியாகக் கூடிய ஒருவனை, இளம் பிராயத்தில் அவனது தகைமையை யறியாது, சில்ப சாஸ்திரத்திற் பயிலும்படி நிர்ப்பந்திப்பது எவ்வளவு அறிவீனம். இம்மாதிரியே தற்காலக் கல்வி முறை நிகழ்கின்றது.

மேற்கூறியபடி, மனிதன் த்ரிலோகி யெனப்படுவான் அதாவது மூன்றுலகங்களில் சஞ்சரிக்கிறவன். ஒவ்வொருவருக்கும் இம்மூன்றுலகங்களிலும் சஞ்சரிப்பதற்கேற்ற மூன்று சரீரங்கள் உள்ளன. இம்மூன்றில் ஒன்று மட்டும் நமது ஸ்தூல சரீரம். மற்ற இரண்டும் ஒன்றை விட ஒன்று ஸூக்ஷ்மமானது. ஸ்தூல சரீரத்தால் இவ்வுலகத்தில் நமது கார்யங்களைச் செய்கிறோம். நமது காமநா சரீரத்தாலேயே நாம் விஷயங்களை இச்சிக்கிறோம். நமது மாநஸ சரீரத்தாலேயே நமது வியவஹாரங்களை ஆலோசிக்கிறோம். சிலரிடத்தில் இம் மூன்று சரீரங்களும் நல்ல அபிவிருத்திபடைந்திருக்கும். அவர்கள் உயர்ந்த விஷயங்களை ஆலோசிப்பதற்கும், சிறந்த நன்னோக்கங்களில் தீவ்ரமாய் ஆசை கொள்வதற்கும், மிகச் சுறுசுறுப்பாய் உழைப்பதற்கும் தகுதியுள்ளவர்களாயிருப்பர். ஆதலால்தான் கருமம், பக்தி, ஞானம் என்ற மூன்று மார்க்கங்கள் மூன்றுவித அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன. ஒருவன் மாநஸ சரீரமும், காமநா சரீரமும், சொற்ப அபிவிருத்தியை மட்டும் அடைந்திருக்

குமாயின், அவன் முரட்டுத்தனமான உழைப்புக்குத்தான் உதவுதான். அவனால் வேறு உயர்தர விஷயங்களில் பிரவிர்த்திக்க முடியாது. சிலரிடத்தில் மற்ற இரண்டு சரீரங்களும் சற்று விருத்தியடைந்திருக்கலாம், ஸ்தூல சரீரம் மெலிவாயிருக்கலாம். அவர்கள் முரட்டு வேலைக்கு உதவமாட்டார்கள். புத்திபலத்தால் ஆகக்கூடிய வேலைகளை நன்கு முடிப்பார்கள். கர்மம், பக்தி, ஞானம் என்ற மூன்று மார்க்கங்களும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தனி மார்க்கங்களல்ல. ஒன்றையொன்று ஆசிரயித்ததாகவேயிருக்கிறது. எக்கார்யத்தைச் செய்வதானாலும், அதைப்பற்றிய பூர்ண ஞானமும், அதில் விசேஷ பக்தியும், தளராத உழைப்பும், (கருமமும்) இன்றியமையாதனவாம்: ஆகையால் எவரெவரிடம் எந்தெந்த ஆம்சம் விசேஷமாய் விளங்குகின்றதோ அதற்குத் தகுந்த பிரவிர்த்தியைப் பிரதானமாய் மேற்கொண்டு, தாழ்வாயிருக்கும் மற்ற இரண்டு அம்சங்களையும் விருத்திக்குக் கொண்டுவரவேண்டும். ஹிந்துக்களாகிய நாம் ஞானத்தையும், சிரத்தையையும் இழந்து போலிக் கருமங்களையே மதவிஷயமாய் அநுஷ்டித்து வருகிறோமன்றோ!

கல்வியின் வாஸ்தவமான பிரயோஜனம் என்னவெனில், நற்சீலம் அமையப்பெறுவதேயாகும். மனிதன் தன்னுடைய ஞானம், இச்சா, கிரியா சக்திகளை நற்சீலத்தையடைதலுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்விதமே நமது வாலிபர்களை நாம் பழக்கவேண்டும். வாலிபர்கள் முற்காலங்களில் குருகுலங்களில் இவ்வித பழக்கத்திற்குட்பட்டிருந்தார்கள். முற்காலத்து குருக்கண்மார் மேற்கூறிய மூல தத்துவங்களை நேருக்கு நேராய் அறிந்தவர்களாதலால், தமது சிஷ்யர்களை அவற்றிற்கேற்பவே நடத்திவந்தனர். தமது அன்பின் பெருக்கத்தால் சிஷ்யர்களுடைய உத்ஸாஹத்தை குறையவொட்டா

356



மல், அவர்களிடம் பூர்வஜன்ம வாஸனைகளாய் அமைந்த நற்குணங்களை மலரச் செய்து வந்தனர். இக்காலத்திலோ, நாம் நமது சிறுவர்களை அலக்ஷ்யம் செய்கிறோம். அவர்கள் புத்தி சாதுர்யமாய்க் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான நியாயத்தோடு விடையளிப்பதில்லை. பொய் சொல்லலாகாதென்று ஒரு சமயம் சொல்லிவிட்டு, மறுசமயம் நாமே பொய் சொல்வோமானால், அப்பிள்ளைகள் எவ்விதம் நம்மூலமாய் நல்வழிப்படும். பள்ளிக்கூடங்களிலோ, உபாத்தியாயர்களுக்கு அடிக்காமல் பிள்ளைகளைப் படிப்பிக்கத் தெரியாது. இவர்களிடமிருந்து அப்பிள்ளைகள் எங்ஙனம் தயை என்னும் குணத்தைக் கைக்கொள்ளுவது? நாம் நமது சரீர சௌக்யத்தைக் கவனிப்பதில்லை. தேஹ அப்யாஸத்தை அலக்ஷ்யஞ் செய்கிறோம், வியாதியால் வருந்துகிறோம். நாம் எவ்வித உயர்லக்ஷ்யங்களையும் கருத்திற் கொண்டு அவற்றிற்கிசைய நமது பிரவிர்த்தியை நேர்மைப்படுத்துகிறோமில்லை. ஸ்வதேசாபிமானம், பரோபகாரம் இவ்வித உயர் நோக்கங்களைக் கொள்கிறோமில்லை. இவ்விதம் ஒழுகும் நம்மைப் பார்த்து நமது சிறு பிள்ளைகள் சீர்திருந்துவது எங்ஙனம்? ஆகையால் நமது நன்மாதிரியை முன் மாதிரியாக வைத்து அன்பையே ஆதாரமாகக்கொண்டு சிறு பிள்ளைகளைப் பழக்குவதே உத்தமமாகும். நாம் சிறு பிள்ளைகளுடன் நெருங்கிப் பழகுவதால் நாமும் அன்பையே விருத்திசெய்து கொள்வோம். அவர்களுடைய கபடற்ற மனத்தைப் பார்த்து நாமும் பிறரைச் சந்தேகித்தலைத் தவிர்ப்போம். சிறு பிள்ளைகள் ஸ்வபாவகாகவே, நல்லவர்களாகையால்; அதாவது எந்த குணமும் அவர்களிடத்து வாஸநா ரூபமாகவே இருக்கிறபடியால், அவைகள் நேர்மையாய் விருத்தியடையும்படியாக, வாஸநா ரூபமாயுள்ள நற்குணங்களை மட்டும் அபிவிர்த்திக்கு வரும்படி செய்வதும், துர்வாஸனைகளான தீக்குணங்களைப் பொய்த்துப்போகும்படி செய்வதும், நங்கடமையாயிருக்கும்.

(தொடரும்)

B. S. ராமசுப்பய்யர்.

# சிறுவர்க்குரிய விஷயம்.

## நாரதர் சரித்திரம்.

முன் ஒரு காலத்தில் ஓர் அடிமை இருந்தான். அவன் மனைவிக்கு ஒரு புத்திரன் பிறந்து அவனும் பால்ய பருவத்தை (இளம்பிராயத்தை) யடைந்திருந்தான். அச்சமயம் தாயும் பிள்ளையுமாக சில பரிசுத்தர்களான பெரியோரை அண்டி வேலைசெய்து பிழைத்து வந்தார்கள். இப்படியிருக்குங்காலத்தில், மழைக்காலமாயிருந்த ஓர் சமயம், சில யோகிகள் அப் பெரியோர்களிடம் வந்து வசிக்கவேண்டிநேர்ந்தது. அப்போது, அச் சிறு பையனை, வந்திருந்த யோகிகளுக்கு ஊழியஞ் செய்யுமாறு அப் பெரியோர்கள் அனுப்பிவித்தார்கள். "உன்னால் செய்யக்கூடிய பணிவிடைகள் அனைத்தையும் அவர்கட்குச் செய்வாயாக" என்றும் உத்தரவளித்தார்கள். அப்படியே அவனும் முனிகளுக்கு மிகவும் கீழ்ப்படிந்து, சொன்னபடி யெல்லாம் நடந்து வந்தான். இவன் எவ்வளவு சுறு சுறுப்பாய்த் தன் கருமமே கண்ணாயிருக்கிறான் என்பதை அம்முனிகள் கண்டு வியந்து, அவனிடத்தில் மிக்க இரக்கங்கொண்டார்கள். அச்சிறு பையனும் தன் விளையாட்டை முற்றவும் ஒழித்து, அக்குருக்கள் இட்ட வேலையைச் செய்து முடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான். அவன் கொஞ்சமும் கோபங்கொள்ளாதவனாயும், எப்போதும் ஜாக்ரதையுள்ளவனாயும், தான் அதிகமாய்ப் பேசாமல், அவர்கள் சொற்படியே கேட்டு நடப்பவனாயும், இருந்து வந்தான். தன் பேச்சைக்காட்டிலும் அவர்கள் வார்த்தைகளே மேலானவைகள் என்றும் உணர்ந்தான். அவர்களுடைய வசனங்கள் யாவும் தேர்ந்த அநுபவத்தால் விளைந்த ஞான மொழியாகவே இருக்கும் என்று அவன் நம்பிக்கை கொண்டிருந்தான்.

யோகிகளும் அப்பையனுக்குச் சோறு முதலியவை கொடுத்து அவனைப் பிரியமாய் நடத்தி வந்தார்கள். தாம்

கள் ஈசுவரனைக் குறித்துப் பாடும் இனிய கீதங்கள் யாவையும் கேட்டுக்கொண்டிருக்கும்படிக்கும் அவனுக்கு அநுமதி கொடுத்தார்கள். மிகுந்த பக்தியால் அவன் சித்தம் சுத்தியாகி, கிருஷ்ணபகவானுடைய அழகான கதைகளைக் கேட்கக் கேட்க ஈசுவரனிடத்தில் பேரன்பு பூரித்து, அவன் மநம் ஈசனிடத்தே நிலை பெற்றது.

அம் முனிகள் ஊரை விட்டுப் புறப்படுமுன் அவனுக்கு அநேகத்தைக் கற்றுக்கொடுத்தார்கள். அவன் எப்போதும் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டே யிருந்தான். பிறகு நாளாக நாளாக பகவானிடத்தில் அவனுக்கு பக்தி அதிகரித்தது.

அவனுடைய குருக்களான அவ்வன்புள்ள ரிஷிகள் போனபிறகும் ஹரியைத் துதித்தே வந்தான். கொஞ்சகாலத்துக்குப் பிறகு அவன் தாயார் பாம்பு கடித்து இறந்தாள். அப்போது பையன் துணையற்றவனானன். அப்போதும் ஹரி நாம கீர்த்தனமே பாடிக்கொண்டு, இந்தகஷ்டமும் ஈசன் செயல்தான் என்றெண்ணி தைர்யங்கொண்டு, தன்னிருப்பிடத்திருந்து வடக்கு நோக்கிப் பிரயாணஞ் செய்யத் தீர்மானித்தான்.

துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கும் அநேக காடுகளையும் அநேக நதிகளையும், மலைகளையும் தாண்டிக் கடைசியாய் ஓர் காட்டிற்கு வந்தான். அங்கிருந்த ஓர் அரச மரத்தடியில் உட்கார்ந்து தன் குருக்கள் கற்றுக்கொடுத்தவற்றை நினைக்க ஆரம்பித்தான். பரமேசுவரனை அன்போடு தியானிக்கவே அவனுக்கு ஈசுவரனிடத்தில் பக்தியும் அன்பும் அதிகரித்துக்கொண்டே வந்தது. கண்களில் நீர் ததும்ப, பகவானைத் தியானித்துப் பிரார்த்திக்க; தன்னைச் சுற்றியும் தனக்குள்ளேயும் ஹரியானவர் இருப்பதைக் கண்டுகொண்டான். அப்பேரானந்தத்தால், தான் என்றும் பிறர் என்றும் வேற்றுமையையே, அது முதல் அவன் அறிந்ததில்லை.

பிறகு ஈசுவரன் மிக அமரிக்கையாயும் மிருதுவாயும் அந்தரங்கமாய் அவனுக்கு உணர்த்தியது பின் வருமாறு:—

"எவரெவர் சுயநயமான ஆசைகளை ஒழிக்கிறார்களில்லையோ அவர்களெல்லோரும் என்னைப் பார்ப்பது சிரமமாகும். நீ வெகு காலமாய் நல்ல ஊழியனாயிருந்து உன் மனதையும் என்னிடத்திலேயே எப்போதும் வைத்திருந்தமையால் நான் உன்னிடம் வந்தேன். நீ இன்னொரு பரிசுத்த சரீரத்தில் பிறப்படைந்து என்னோடு (ஒன்று சேர்வாயாக) ஐக்கியமாகக் கடவாய்."

ஈசுவரன் இவ்வாறு சொல்லி மறைந்த பிறகும் ஹரி கீர்த்தனத்தையே செய்து வந்து, கடைசியாக அப்பையன் தன் தேஹத்தினின்றும் பிரிந்தான்.

இப்பையன் தான் பிந்திய கல்பத்தில் நாரதராக மறுபிறப்படைந்து, லோக க்ஷேமத்திற்காக இடைவிடாமல் உழைப்பதையே தொழிலாகக் கொண்டவர். தேவர்கள் மூலமாய்க் கிடைத்த வீணையொன்று அவருக்குண்டு. அவ்வீணையை வாசித்து உலகமெங்கும் ஹரிகீர்த்தனத்தையே பிரபலப்படுத்தி, மனிதர்களின் ஹிருதயத்தில் ஈசுவர பக்தியை விளைவித்து வந்தார்.

இந்த கானங்களை, நாம் மட்டும் கவனித்து உற்றுக் கேட்டால், இப்போதும் கேட்கலாம். அவைகளை மனித சஞ்சாரமுள்ள இடங்களிலும் மனிதசஞ்சாரமில்லாத நடுக்காட்டிலும் இன்னும் எல்லாவிடங்களிலும் கேட்கலாம். ஆனால், நாம் கோபமும் அஜாக்ரதையும் நிறைந்தவர்களாயிருந்தால், அவ் வீணா நாதத்தைக் கேட்க முடியாது. அவருடைய வீணா நாதத்தின் மூலமாகவே தம் சக்தியை வெளியிட்டு இவ்வுலகத்தை ரக்ஷிக்கிறார். நாம் கடவுளை நினைந்து எல்லோரிடமும் அன்பும் சாந்தமும் நிறைந்தவர்களாய் நடைபெறவேண்டும். அப்படியானால் ஹரியினுடைய அநுக்ரஹத்தைச் சீக்கிரம் பெற்று நாரதர் எப்போதும் உலகத்தோருக்காகப் பாடிக்கொண்டிருக்கும் ஞானஸாரமான திவ்ய கானங்களைக் கேட்போம். நாரதரை முன்னிட்டே நமது புராணங்களெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றன. பகவான் வியாஸர் நாரதருடைய அநுக்ரஹத்தாலேயே புராணங்களையெழுதினார்.

வஸந்தானந்தன்.

# சமாசாரம்.

---

## Theosophical Conference at kadiri.

அனந்தப்பூர் ஜில்லாவில் காதிரி என்னும் இடத்தில் சென்ற நவம்பர் ௴ 20, 21 தேதிகளில் பிரஹ்மக்ஞான சபையார்கள் கூடி அனேக உபந்யாஸங்கள் நடைபெற்றன. அவைகளில் "பக்தி" என்னும் விஷயத்தைப் பற்றி நடந்த உபந்யாஸத்தைக் கேட்ட ஹாஜி மொமின் பக்ருடின் சாயபு என்னும் மகமதிய பிரபு ஒருவர் தாம் கேட்ட விஷயங்களுக்கும், தம்முடைய மதத்தில் அது விஷயமாய் சொல்லியிருக்கும் தத்துவங்களுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை என்றும், அதே விஷயத்தைப் பற்றி தம்முடைய ஜாதியார்களுக்கு மறுபடியும் உபந்யாஸம் செய்யும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் அந்தப்படி பிரஹ்மஞான சபையின் மெம்பரான ஸ்ரீமான் P. நரசிம்மய்யா என்பவர் பிரசங்கம் செய்ததில் அனேக மகமதியர்கள் கேட்டு சந்தோஷமடைந்தார்கள்.

---

## Theosophical Federation at Gwalior.

ஸெண்டிரல் இந்தியாவிலும் ராஜபுதனுவிலும் உள்ள எல்லா பிரஹ்மக்ஞான கிளைச்சபைகளும் சேர்ந்து சென்ற டிஸம்பர் ௴ 1, 2 3. தேதிகளில் க்வாலியர் என்னும் இடத்தில் ஒரு மகாசபை கூடினார்கள். அந்த சமயத்தில் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையவர்கள் அக்கிராஸநம் வகித்தது மல்லாமல் அந்த மூன்று தினங்களிலும் அனேக அரிய விஷயங்களைப் பற்றி உபந்யாஸம் செய்தார்கள். சுற்றுமுள்ள தேசங்களிலிருந்து வந்திருந்த ஜனங்களனைவரும் கேட்டுக் களிப்புற்றனர். அவ்விடத்திலுள்ள பிரஹ்மக்ஞான சபையில் மெம்பர்களாயுள்ள ஸ்திரீகளின் சௌகரியத்தை உத்தேசித்துப் பிரத்தியேகமாய் "ஸரஸ்வதி லாட்ஜ்" என்னும் கிளைச் சபை ஒன்று அச்சமயத்தில் ஏற்படுத்தப் பட்டது.

---

## Theosophical Lodge at Basora.

இப்போது நடக்கும் மகாயுத்தத்தில் இந்தியாவிலிருந்து பார்சிய வளைகுடா கடலுக்கு (Persian Gulf) அனுப்பப்பட்ட சைனியத்தில் பிரஹ்மக்ஞானசபை மெம்பர்கள் அநேகர் போயிருக்கிறார்கள். அவர்களில் ஒருவரான டாக்டர் ஜேகப் ஸாலமன் என்பவருடைய முயற்சியால் அங்கே போன இடத்தில் பஸோரா என்னும் இடத்தில் 12 மெம்பர்களைச் சேர்த்து கிளைச் சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டதாம்.

---

# தியானக்கிரம விஷயம்.

## நவம்பர் மாசம்.

### தினசரி அப்பியாசம்.

1. குருநாதன் செய்த உபதேசம் தனக்கு உதவியாக விருப்பதுபோல், பிறருக்கும் அவ்வுபதேசம் உபகாரமாக வேண்டுமென்று இச்சித்தல் வேண்டும்.

2. என் குருநாதன் எனக்குச் செய்த உபதேசத்தின் படி நீ நடந்தால் அந்த உபதேசம் உனக்கும் அநுகூலமா யிருக்கும்.

3. பிறருக்கு உதவி செய்ய சமயம் வாய்த்த காலத்தில்; ஸ்தூல சரீரமானது அப்படி உதவிசெய்வது தொந்திரவென்று உணர்ந்து, வேறு யாரேனும் செய்யலாமேயென்று சொல்லுமானால், உன்னிடமிருக்கும் ஜீவாத்மா நல்ல காரியம் செய்வதில் என்னைத் தடை செய்யாதேயென்று மறுமொழி சொல்லவேண்டும்.

4. உன்னுடைய மாநஸிக சரீரம், குருநாதனுடைய வேலையைப்பற்றியும், பிறருக்குதவி செய்யவேண்டும் என்பதைப்பற்றியும், நினைக்காமல், சுய அபிவிருத்தியைப்பற்றித் தன்னலம் பாராட்டுகிறது.

5. சாரமில்லாத விஷயங்களில் எப்பொழுதும் நீ தலையிட்டுக்கொள்ளாதே. வீண் விவகாரம் செய்யாமல் பிறருக்கு இணங்கு. ஏனென்றால் நீ எப்பொழுதும் சாந்தமுள்ளவனாகவும், பக்ஷமுள்ளவனாகவும், விவேகமுள்ளவனாகவும், இணக்கமுள்ளவனாகவுமிருக்கவேண்டும். நீ ஸ்வேச்சையாயிருக்க விரும்புகிறபடி மற்றவர்களுக்கும் இடங்கொடு.

6. உனக்குத் தெரிந்த விஷயத்தை மற்றவர்கள் அறியும்படி செய்வது உனது கடமை.

7. பிறருக்குதவிசெய்ப எது உனக்கு அதிக சாதகமாக இருக்குமோ, அதைப் படி பொறுமையுடனும் சிரத்தையுடனும் படி. பிறர் உன்னைப் புத்திசாலி யென்று மதிக்கவேண்டுமென்றும், நீ புத்திசாலியென்று நினைத்து அகம்பாவம் கொள்ளும்படிக்கும், நீ படிக்காதே. ஏனென்றால் புத்திமானே புத்திசாலித்தனமாக உதவி புரிவான்.

8. மற்றவர்கள் விஷயத்தில் உன்னுடைய எண்ணங்கள் உண்மையுள்ளவைகளாக விருக்கவேண்டும். அவர்கள் விஷயம் உனக்குத்தெரியாதவரையில் ஒன்றும் அவர்களைப் பற்றி நீ நினைக்கக்கூடாது.

9. நாளடைவில் தன்னயம் சிறிதும் கருதாமல் பிறருக்குதவிசெய்ப வேண்டுமென்ற எண்ணம், உன்னிடத்தில் பூர்த்தியாய் ஏற்படும்.

10. நீயும் உன் சகோதரனும் எதில் ஒத்துக்கொள்ளக்கூடுமோ, அதுமூலமாய் நீ உன் ஸகோதரனுக்குக்குதவி செய்யலாம். அதுதான் ஈசுவராம்சம். அதை அவனிடத்தில் மலரச் செய்வாயாக. அதை அவன் தெரிந்து கொள்ளும்படி செயயப் பிரயத்தனப்படு. அப்படியானல் உன் சகோதரன் துன்மார்க்கத்தில் செல்லாதபடி நீ தப்புவிப்பாய்.

11. நீ யாருக்காவது உதவி செய்தால், எவ்வளவுமட்டில் அவனுக்கு நீ உதவி செய்திருக்கிறுய் என்பதைப் பார்க்க இச்சிக்கிறுய். சிலவேளைகளில் அவன் அதை உணர்ந்து உனக்கு அதற்காக நன்றியறிவுள்ளவனு யிருக்கவேண்டுமென்றும் நீ இச்சிக்கிறுய். இதுவும் ஓர்வித இச்சைதான். அத்துடன் அவநம்பிக்கையையும் காட்டுகிறது. மனப்பூர்வமாக ஒருவனுக்கு நீ உதவிபுரிந்தால் அதற்குஒரு

பலன் உண்டாகவேண்டும். அவ்விதபலன் நீ கவனித்தாலும் கவனிக்காவிட்டாலும் உண்டாகும். உலகத்தை நேசிப்பதால் உலகத்தார் கைங்கரியத்தில் உன்னை அர்ப்பணம் செய்துகொள்ள வேண்டும். உன்னை அந்த கைங்கர்யத்துக்குத் தியாகம் செய்துகொள்ளாமலிருக்கமுடியாது.

12. சித்திகள் பெறுவதற்கு இச்சைப்படாதே. அவைகளை அடையச் செலவழிக்கும் காலத்தையும் பலத்தையும் மற்றவர்களுக்கு உழைப்பதில் செலவிடலாம். சாரமில்லாத விஷயங்களில் எப்பொழுதும் தலையிட்டுக்கொள்ளாதே. வீண்விவகாரம் செய்யாமல் பிறருக்கு இணங்கு. ஏனென்றால் நீ எப்பொழுதும் சாந்தமுள்ளவனாகவும், பக்ஷமுள்ளவனாகவும், விவேகமுள்ளவனாகவும், இணக்கமுள்ளவனாகவுமிரு. மற்றவர்களுக்கும் இடங்கொடு.

13 சொற்பமாய்ப் பேசுவது நலம். நீ சொல்ல விரும்புகிற விஷயம் உண்மையாயும் பக்ஷமுள்ளதாயும் உபகாரார்த்தமாகவும் இருக்குமென்று நீ நிச்சயமாயறியாதவரை ஒன்றும் பேசாமலிருப்பது நலம்.

14. எப்பொழுதும் விசனத்துக்கும் மனத்தளர்ச்சிக்கும் இடம் கொடுக்காதே, மனத்தளர்ச்சி பிசகானது. உன்னுடைய மனத்தளர்ச்சியானது மற்றவர்களைத்தாக்கி அவர்களுக்கு வருத்தத்தை உண்டு பண்ணுகிறது. அவ்விதம் செய்ய உனக்கு பாத்தியதை யில்லை.

15. துன்பங்கள் வருத்தங்களுக்குட்பட்டு பிறர் உதவியை வேண்டுகிறதாக நீ அறியும் எவரையாவது ஒருவரைப்பற்றித் தினசரி நினைத்து உன்னுடைய அன்பு நிறைந்த எண்ணங்களை அவரிடம் செலுத்து.

16. எல்லோரையும் அவரவர் இஷ்டப்படி காரியங்களைச் செய்யும்படி விடு. ஆனால் உன் உதவியை அபேக்ஷிக்கும் காலத்தில் உதவி செய்யத் தயாராயிரு. ஒருபோதும் பிறர் காரியத்தில் தலையிடாதே.

17. மனித வர்க்கத்திற்குதவிபுரிய வேண்டுமானால் எண்ணமானது செய்கையில்முடிவுபெறவேண்டும். சோம்பலாயிருக்கக்கூடாது. எப்பொழுதும் நல்ல காரியத்தில் முயற்சியிருக்கவேண்டும். எப்பொழுதும் உன்னுடைய கடமையை நீ செய்யவேண்டும் மற்றொருவன் அனுமதியின் பேரில் மட்டும் அவனுக்குதவிபுரியும்பொருட்டு அவன் காரியத்தில் நீ பிரவேசிக்கலாமே தவிர மற்ற வேலைகளில் பிரவேசிக்கக் கூடாது.

18. உன்னுடைய மதக் கோட்பாடுகளில் நீ எவ்வளவு அபிமானமுள்ளவனாயிருப்பாயோ, ஏனைய மதங்களின் விஷயத்திலும் அவ்வளவு அபிமானமுள்ளவனாயிரு. எந்த உன்னதமான பதவிக்கு உன் மதம் ஒரு மார்க்கமாயிருக்கிறதோ, அப்படித்தான் அந்த மதமும் மார்க்கம். பரோபகாரம் செய்யவேண்டுமானால் நீ எல்லோரையும் அறிந்து கொள்ளவேண்டும்.

19. இப்பொழுது உன் கண் திறக்கப்பட்டபடியால் முன் நீ அநுசரித்துவந்த மத சம்பந்தமான கொள்கைகளும் சடங்குகளும் உனக்கு அநாவசியமாய்த் தோன்றும். ஆயினும், அவைகள் வேறு சிலருக்கு உபயோகமாயிருக்கும். ஆகையால் அவர்களின் பொருட்டு நீ அவைகளை நன்கு மதிக்கவேண்டும் நிந்திக்கலாகாது.

20. தன்னுடைய குழந்தைப் பருவத்தை மறந்து குழந்தைகள் விஷயத்தில் அன்பில்லாதவன், குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கவாவது, அவர்களுக்குதவி புரியவாவது அருகனல்லன். ஆகையால் எல்லாரிடத்திலும் பக்ஷமாயும் அன்பாயும் வித்தியாசமின்றியும் எல்லோரையும் சமமாகக் கருது.

(இன்னும் வரும்.)

கே. எஸ். ராமசந்திர ஐயர்.

இச்ஸபையோர் தத்துவ தரிசநம் ஒன்றையே நோக்கி, ஆத்மக்
ஞான விஷயமாய் உழைத்து, நாஸ்திகத்தைக் தொலைத்து, மத
விஷயங்களில் அறிவுடன் கலந்த சிரத்தையை விளைத்து, மனுஷ்ய
வர்க்கத்திற்குபகரிப்பவராவர். இதிற் சேர விரும்புவோர் எம்மத
ஸ்தராயும், அல்லது ஓர் மதத்தையும் தழுவாமலுமிருக்கலாம். இம்
மூன்று நோக்கங்களே இச்சபைக்குப் பிரதானம். பிறமதங்களை
யும் பரபக்ஷமின்றி ஆராய்வதால்,மதத்துவேஷம் நீங்கியவர்களாயும்,
அபிப்ராய பேதங்களால் ஒற்றுமை குன்றாதவர்களாயும் இச்சபை
யோர் உளர். வெறும் நம்பிக்கையால் மட்டுமல்லாமல், தத்துவத்
தை நேருக்கு நேராய் அறியவேண்டிய அவாவினாலேயே, இச்சங்க
த்தினர் அனைவரும் ஒரு மனப்பட்டிருக்கின்றனர். தேர்ந்த படிப்
பினாலும் ஆழ்ந்த சிந்தனையாலும், சுத்த சர்யையாலும், உயர் நோக்
கங்களிற் கொள்ளும் ஸ்திர பக்தியாலுமே ஒருவன் தத்வத்தை
யடையக்கூடும். தீவ்ரமான உழைப்பின் பயனான அநுபவத்தால்
தான் ஒருவனுக்கு உண்மை கைகூடும். நிர்ப்பந்தத்தால் கட்டுப்
படுத்தும் கொள்கை எதுவும் உண்மையாகாது, அறிவில்லாமல் நம்
பலாகாது. எல்லோரிடத்தும் பொறுமையும், பொறுமையற்றவர்
களிடமுங்கூட நமது கடமையாகக்கொண்டு, அன்பையே காட்டு
வதும், அறிவிலிகளை நிந்தித்து துவேஷியாமல், அவர்களுக்கு போ
திப்பதுமே சிலாக்கியமெனக் கொள்வதோடும், ஒவ்வொரு மதமும்
பிரஹ்மக்ஞானத்தின் ஓர் அம்சமென்றும், அதனாலதை அசட்டை
செய்யாதுபடிக்கவேண்டுமென்றும் ஒருவரையும் ஓர் மதத்தினின்று
இன்னொரு மதத்திற்குப் பெயர்க்காமல், அந்தந்த மதத்தில் அழகா
யுள்ள உபதேசங்களை யநுஸரிக்கச்செய்தலே மேன்மை யென்றும்
இச்சபை வற்புறுத்துகின்றது. உண்மையே இச்சபையின் உயர்
லக்ஷ்யம். உபசாந்தமே இச்சபையோரிடம் விளங்கும்.

பிரஹ்மக்ஞான தர்சனம் எல்லா மதங்களுக்கும் ஆதாரமான
தத்துவங்களின் தொகுதி. அது இம்மதத்தைத்தான் சார்ந்தது,
அதைத்தான் சார்ந்தது என்று சொல்லுதல் இயலாததாம். அதன்
தத்துவ விளக்க முறையானது, உலக வாழ்க்கையிற்றோன்றும் ஸம்
சய விபரீதங்கள் அனைத்தையும் விலக்கி, எத்தகைய உயர்ந்த நீதி
நெறியுடனும்,பரமகாருண்யத்தோடும் விகாஸமுறையானது நடை
பெற்று வருகிறது என்பதை நுண்ணிய விவரங்களுடன் பிரகாசப்
படுத்துகின்றது. அகண்டமான வாழ்க்கையில் மரணமென்பது
அடிக்கடி நேரும் ஓர் ஸ்ம்பவமென்றும், ஸ்தூலதேஹம் நீங்கியவு
டன் கட்டவிழ்த்து விடப்பட்டவன்போல, சிரமத்தினின்று விடு
பட்டு அதிமேன்மையான ஸூக்ஷ்மலோகத்தில் ஜீவன் விழித்துக்
கொள்கிறானென்றும் விவரிக்கின்றது. ஞானிகள் நிதர்சனமா
யறிகின்றவாறே, நமது யுக்திக்கும் பொருத்தமாக, பற்பல மதங்க
ளின் கொள்கைகளையும் ஆசரணைகளையும் ஸூக்ஷ்ம அர்த்தங்களு
டன் விளக்குகின்றது.

பிரஹ்மக்ஞான ஸபை அங்கத்தினர்கள் இவ்வுண்மைகளைப்
படித்து, அவைகளின் பிரகாரமே ஆசரிக்க முயலுவர், கற்று, உண
ர்ந்து அடங்கவும், உயர்நலம் பெறவும், விடாமுயற்சியோடுழைக்க
வும், பிரியப்படும் ஒவ்வொருவரும் இச்சபையிற் சேரலாம். அப்
படிச்சேர்ந்த ஒவ்வொருவரும் போலியாக இராமல், உண்மையான
**பிரஹ்மக்ஞானியாகவே ஒழுகுவாராக.**

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | | ரூ. அ. பு |
|---|---|---|
| 1. | வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. | பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3. | இயேசு கிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. | மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0–12—0 |
| 5. | மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. | பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. | ஔவையோகக்குறள் (தமிழினின்று ஆங்கிலமொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. | ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. | இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10. | மௌநவாக்கு | 0—2—0 |
| 11. | ஸந்மார்க்க தீபம் | 0—2—0 |
| 12. | மாதுஸ்ரீ அந்நிபெஸ்ண்ட் அம்மையார் சரித்திரம் (படத்துடன்) | 0—1—0 |
| 13. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. | காயத்ரீ | 0—1—0 |
| 16. | காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழ்மொழி பெயர்ப்பு) | 0—1—0 |
| 17. | மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. | ஹிந்து என்பவன் எவன்? | 0—0—6 |
| 19. | லோககுருவின் அவதாரங்கள் | 0--0—6 |
| 20. | பகவான் கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. | வெள்ளியம்பலம் என்ற ஞானிகளின் சங்கம் | 0—1—0 |
| 22. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—6 |
| 23. | உதாஸீந ஸாது ஸ்தோத்ரம் (ஸம்ஸ்கிருத மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும் | 0—6—0 |
| 24. | மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. | தேவாலயம் | 0—0—3 |
| 26. | பிரஹ்மக்ஞானமும் பிரஹ்மக்ஞான சபையும் | 0—0—6 |
| 27 | ஸந்மார்க்கமுறையில் ஹிதோபதேசம் | 0—1—0 |
| 28. | மநீஷா பஞ்சகம் | 0—1—0 |
| 29. | குருசிஷ்ய ஸம்பந்தம் | 0—1—0 |

---

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மக்ஞானஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியாஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.